விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 10 வியாழக்கிழமை (24.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095




# இலங்கையைப் பிளவுபடுத்த இந்தியா மறைமுகத் திட்டம்

## பாகிஸ்தான் ஊடகம் தகவல்

(கொழும்பு)

**தென்னாசியப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இலங்கையைப் பிளவுபடுத்த இந்தியா மறைமுகமாக திட்டமிட்டு வருவதாக பாகிஸ்தானின் த நேசன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கை அரசாங்கம் சீனாவை நோக்கி சார்ந்து வரும் நிலையில் அதற்கு பாடம் கற்பிக்கும் நோக்கத்துடன் இந்தியா இவ்வாறு திட்டமிடுவதாக நம்பகரமாகத் தெரியவருவதாக அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் இனங்களுக்கிடையில் பிரிவினைகளை உருவாக்குவதன் மூலம் இலங்கையைப் பிளவுபடுத்தும் புதுடில்லியின் திட்டங்களை விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் தகவல் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. தலைவராக தொடர்ந்தும் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க கட்சியின் செயற் குழுவினால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவராக இருப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

கரு ஜயசூரியாவும் (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வு யோசனைகளை த.தே.கூட்டமைப்பு ஏப்பிரலில் முன்வைக்கும்

### மாவை எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏப்பிரல் 27ஆம் திகதி அரசாங்கத்தின் தூதுக் குழுவை சந்திக்கும்போது அதிகாரப் பகிர்வு குறித்த யோசனைகளை சமர்ப்பிக்கவுள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையானது இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குவதுடன் தமிழ் மக்களின் மனத்தாங்கலையும் தீர்த்துவைக்கும் என தான் நம்புவதாக மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் த.தே.கூட்டமைப்பும் ஏப்பிரல் 07 மற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

## லிபியா மீதான தாக்குதல்

## ஐ.நா. கொழும்பு அலுவலகம் முற்றுகையிடப்படும்- வீரவன்ச



(கொழும்பு)

லிபியா மீதான ஐ.நா. கூட்டுப்படைகளின் தாக்குதல் குறித்து எதிர்ப்பைத் தெரிவீக்கும் முகமாக இன்று கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முற்றுகை இடப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச அறிவித்துள்ளார்.

ஈராக் மீது பொய்யான காரணங்களை முன் வைத்து ஆக்கிரமித்து அதன் எண்ணெய் வளத்தைச் சுரண்டுவதைப் போலவே லிபியாவையும் ஆக்கிரமிக்க அமெரிக்கா (20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு இன்றி பயணித்த ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பாதுகாப்பு அதிகாரிகள் இன்றி தனியாக கொழும்பு நகரில் தமது காரில் பயணித்து கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளார் என லங்கா புவத் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர்களின் வாகனங்கள் வேகமாகச் செல்வதால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற பாதக நிலைமைகள் குறித்து கண்காணிப்பதற்காகவே அவர் இவ்வாறு தனியாகச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை (20ஆம் பக்கம் பார்க்க)

## லிபியா மீதான தாக்குதலுக்கு நாடாளுமன்றில் கண்டனம்

(கொழும்பு)

லிபியா மீதான நேட்டோ படைகளின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானமொன்றை நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டது. லிபியா மீதான தாக்குதல் அந் நாட்டின் அப்பாவி மக்கள் பலியாவதற்கே வழிவகுத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டும் பிரஸ்தாப தீர்மானம், அதன் காரணமாக நேட்டோ படைகளின் தாக்குதலை இலங்கை வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு அங்கத்துவ நாடு என்ற வகையில் லிபியா மீது தாக்குதல்களை இலங்கை அங்கீகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ இல்லை என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (ந-5)

## லிபியா மீது சிலுவைப் போர்

லிபியாவில் சர்வதேசக் கூட்டுப்படையினர் கடந்த சனிக்கிழமை தமது வான் தாக்குதல்களை ஆரம்பித்த பின்னர் முதல் தடவையாக அந்நாட்டின் தலைவர் முவம்மர் கடாபி திரிபோலியில் மக்கள் முன்னிலையில் தோன்றி உரையாற்றியுள்ளார்.

தன்னுடைய ஆதரவாளர்களுக்கு நிச்சயம் வெற்றிகிடைக்கும் என்று அவர் கூளுரைத்துள்ளார். லிபியா மீதான கூட்டணிப் படையினரின் முதல்நாள் குண்டுவீச்சில் இலக்காக்கப்பட்டிருந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பிரச்சினைதான் என்ன? தேசப்பற்றுள்ள இயக்கம் கேட்கிறது

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினை என்ன என்பதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதலில் வெளியிட வேண்டும் இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பிரபாகரனின் நாட்டைப்பிரிக்கும் யோசனைகளுடன் பேசுவதற்கு ஒரு போதும் நாம் தயாரில்லை. அதனை நாம் நிச்சயமாக எதிர்ப்போம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கில் அமோக ஆதரவு கிடைத்துள்ளது. மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். அதனை நாம் எதிர்க்கமாட்டோம்.

அதனைவிடுத்து இல்லாத ஒரு பிரச்சினையை தமிழ் (20ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## நடிகை எலிஸபெத் டெய்லர் காலமானார்



ஒஸ்கார் விருதை வென்ற புகழ்பெற்ற ஹொலிவூட் நடிகை எலிஸபெத் டெய்லர், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று காலமானார். அவருக்கு வயது 79 லண்டனில் பிறந்த எலிஸபெத் டெய்லர் 9வயதிலேயே திரைப்படத்தில் நடிக்கத் தொடங்கியவர். இருதடவை ஒஸ்கார் விருதை பெற்றுள்ளார்.

ஹொலிவூட் வரலாற்றின் மிகச்சிறந்த நடிகைகளில் ஒருவரான எலிஸபெத்டெய்லர் அதிகதடவைதிருமணம்செய்தமைக்காகவும் புகழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 7பேரை திருமணம் செய்திருந்தார். (ந)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290


# 2010ஆம் ஆண்டில் 3ஆயிரம் பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டனர்

## வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மட்டும் மூவாயிரம் பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

பாதுகாப்பு படையினரின் ஏற்பாட்டில் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி நேற்று யாழ்.புகையிரத வளாகத்தில் சிரமதானப் பணி இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்போடு முன்னெடுக்கப்பட்டு வந்த டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கை மூலம் அது கட்டுப்பாட்டிக்கு கொண்டு வரப்பட்டது.

பெரும்பாலான நாடுகளில் இந்த டெங்கு நோய் தாக்கமானது அதிகமாகவே இருந்து வருகிறது.

இலங்கையில் டெங்கு நோய் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட போதும் எதிர்வரும் மாதங்களில் அதாவது ஏப்ரல் மே மாதங்களில் தென்மேற்கு பருவ மழை காரணமாக இந்த நோய்த் தாக்கம் மீண்டும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி கடந்த வருடத்தில் மட்டும் இங்கு 22பேர் இந்த நோய்த்தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர்.

இவைதவிர மலேரியா நோயின் தாக்கமும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களில் உள்ள மக்களுக்கு இந்த நோய் அதிகமாக ஏற்பட்டுள்ளதால் இவர்கள் யாழ்.மாவட்டத்திற்கு போக்குவரத்தினை மேற்கொள்வதன் மூலமும் மீள்குடியேறுவதன் மூலமும் இங்கு இந்த நோய் பரவ வாய்ப்புள்ளது.

இலங்கையில் நுளம்பினால் ஐந்து வகையான நோய்கள் பரவுகின்றன. டெங்கு, மலேரியா, யானைக்கால் நோய், சிக்கன் குனியா, யப்பான் மூளைக் காய்ச்சல் என்பன ஏற்படுகின்றது.

எனினும் யாழ்.மாவட்டத்தில் டெங்கு, மலேரியா என்பவற்றின் தாக்கமே அதிகமாக இருந்தது. இவையும் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. டெங்கு நோயால் 2பேர் மட்டுமே இந்த வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## சிகவின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநகர் இராசசிங்கம் வீதியிலுள்ள பாழடைந்த வீட்டிலிருந்து நேற்றுக்காலை 7 மணியளவில் சிசுவின் சடலம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா, சிசுவின் சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-6)

## அதிபர் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் (வகை 2), வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் (வகை 3), எழுவைதீவு றோ.க.வித்தியாலயம் (வகை 3) ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை 2-I, 2-II, III ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம்1, தரம் 2-Iஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்களை தீவக வலயத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

விண்ணப்ப முடிபுத் திகதி 10.04.2011 ஆகும். இவ்வாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ந)

## சிறையில் உள்ள தமிழ் வர்த்தகர் ஐ.நாவிடம் மனு கையளிப்பு

(கொழும்பு)

நியூ மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவர் பொலிஸ் திணைக்களத்தாலும் புலனாய்வுத் துறையினராலும் தன்மீது மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு மனுவொன்றை கையளித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்பு உடையதாகக் கூறி புலனாய்வுப் பொலிஸாரால் தான் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது கடும் சித்திரவதைகளை எதிர் கொண்டதாக இத் தமிழ் வர்த்தகர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனதுபெயர் இராமசாமிபிரபாகரன். நான் பனாமா ரேடர்ஸ் என்ற இலத்திரனியல் வர்த்தக நிலையத்தை நடத்தி வந்தேன். கடந்த 5 மாதங்களாக கொழும்பு நியூமகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறேன். நான் கைது செய்யப்பட்ட போது அங்கீகாரம் பெற்ற ஒரு வர்த்தகராக இருந்தேன். எனது அடிப்படை உரிமைகள் பொலிஸ் திணைக் களத்தினாலும் புலனாய்வு பொலிஸாராலும் மீறப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தினால் நான் வலுக்கட்டாயமாக மரணத்திற்கு வழிகோலுகிற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன். அதிலிருந்து என்னைக்க காப்பாற்றுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பலவந்தமாக என்மீது சுமத்தப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுகளிலிருந்து என்னை விடுவிப்பதற்கும். அநீதியான இந்த நிலைமையிலிருந்து எனது பாதுகாப்பான விடுதலைக்கும் எனக்கு உதவமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கலாசார பிரிவினால் இசை வகுப்புக்கள்

யாழ்.மாநகர சபையின் கலாசாரப் பிரிவினால் புதன், ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப.2.30முதல் பி.ப.4.30 வரை நாவலர் கலாசார மண்டபத்தில் கர்நாடக சங்கீத, நடன வகுப்புக்களும், மேலைத்தேய,கீழைத்தேய வாத்திய கருவி இசை வகுப்புக்களும் பட்டதாரி ஆசிரியர்களால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.

இவ் வகுப்புக்களுக்கான மாதாந்த பயிற்சிக் கட்டணமாக ரூபாய் 150உம், அனுமதிக்கட்டணமாக ரூபாய் ஆயிரமும் அறவிடப்படுமெனவும் இதற்கான விண்ணப்ப படிவத்தினை பெற விரும்புபவர்கள் யாழ். மாநகரசபை கலாசார பிரிவினருடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் யாழ்.மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார். (ந)


**தெரிவு செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளுக்கு வாழ்த்து**

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் இதுவரை தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கும் யாழ். மாவட்ட இடதுசாரிகள் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

சி.குமாரலிங்கம்
மீசாலை வடக்கு.
(4219)

**விற்பனையாளர் தேவை**

புடவை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை. அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண் பிள்ளைகள் நேரில் வரவும். 40-45 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புக்கு:
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P: 021 2222381
(அ-2778)

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட்,யாழ்ப்பாணம்.கே.கே.எஸ்.றோட், இணுவில்

**A/L 2013**
**கலை, வர்த்தகப் பிரிவு**

மீண்டும் புதிய பிரிவு ஆரம்பம்: 26.03.2011 சனி, காலை 8.00 மணி

ஏமது தனித்துவம் வாய்ந்த ஆசிரிய குழுவினால்

| பாடம் | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரததராஜன் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| அரசியல் | கோகுலன் | கோகுலன் |
| அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் |
| நாடக - அரங்கியல் | கணேஷ் | கணேஷ் |
| விவசாயம் | விக்கி | விக்கி |
| கிறிஸ்தவம்/கிறி.நாக. | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் |
| இலகு கணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் |
| சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் |
| மனைப்பொருளியல் | தர்சிகா | தர்சிகா |
| சங்கீதம் | குமுதினி | குமுதினி |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| | ஜைஷன் | |



இட நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக தாமதியாது உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
(C-2788)

**BARATHY**
சித்தன்கேணி

**A/L 2013**
**கலை, வர்த்தகப் பிரிவு**

மீண்டும் புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன

பிரபல்யம் பெற்ற நிறுவனமான பொருளியற் கல்லூரி ஆசிரியர்களுடன் மற்றும் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்றனர்.

| | |
|---|---|
| பொருளியல் | மகேந்திரன் |
| கணக்கீடு | திருக்குமரன் |
| வணிகக்கல்வி | பசில் |
| தமிழ் | பாலா |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | N.T.தரன் |
| புவியியல் | குமரன் |
| வரலாறு | சுதன் |
| அளவையியல் | R.P.சர்மா |
| அரசியல் | கோகுலன் |
| நாடகமும் / அரங்கியலும் | கணேஷ் |
| கிறிஸ்தவம்/கிறி.நாக. | வசந்தன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் |





புதிய பிரிவிற்கான உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
(C-2789)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழலில் சுருண்டது மேற்கிந்தியத்தீவுகள்; அரையிறுதிக்குள் நுழைந்தது பாகிஸ்தான்

(மிர்பூர்)

அப்ரிடி, ஹபீஸ், அஜ்மல் கூட்டணியின் சுழலில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 112 ஓட்டங்களுடன் சுருண்டது.

இலகுவான இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு ஜோராக முன்னேறியது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் மிர்பூரில் நேற்று நடைபெற்ற நொக்-அவுட் சுற்றின் முதலாவது காலிறுதியில் பாகிஸ்தான்-மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின.



இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் சமி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு சிமித்-ஹயில் ஜோடி ஆரம்பம் வழங்கினர்

போட்டியின் முதலாவது ஓவரை உமர் குல் வீசினார். இரண்டாவது ஓவரிலேயே சுழற்பந்து வீச்சாளர் மொகமெட் ஹபீசை அழைத்தார் பாகிஸ்தான் தலைவர் அப்ரிடி.

இதில் கிரிஸ் ஹயில் 08 ஓட்டங்களை எடுத்து உமர் குல்லின் வேகத்தில் அப்ரிடியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சர்வான் களமிறங்க மறுமுனையில் டேவன் சிமித் 07 ஓட்டங்களுடன் ஹபீஸின் சுழலில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டரன் பிரவோ பூச்சியத்துடன் வந்த வேகத்திலேயே ஹபீஸின் சுழலில் வெளியேற மேற்கிந்தியத்தீவுகள் அணி 5.4 ஓவர்களில் 16 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தத்தளித்தது.

இந் நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த சர்வான்-சந்தர்போல் ஜோடி தற்காப்பு ஆட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி ஓட்டங்களைப் பெறுவதை விட விக்கெட்டை காப்பாற்றுவதில் கவனம் செலுத்தியதால் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஓட்ட எண்ணிக்கை ஆமை வேகத்தில் உயர்ந்தது.

இந்த ஜோடியை அப்ரிடி தனது துல்லியமான சுழலால் பிரித்தார். இதில் ராம் நரேஷ் சர்வான் 68 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பொல்லார்ட் (01), தோமஸ் (0) ஆகியோரை அப்ரிடி அடுத்தடுத்து வெளியேற்றினார்.

அடுத்து வந்த அணித்தலைவர் சமி ஒரு ஓட்டத்துடனும் பிஷோ பூச்சியத்துடனும் அஜ்மலின் சுழலில் ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 27.5 ஓவர்களில் 71 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து சந்தர்போலுடன் இணைந்த ரோச் பொறுமையான ஆட்டத்தை வழங்கினார்.

இந்த ஜோடி 14.3 ஓவர்களில் 40 ஓட்டங்களை சேர்த்தபோது கீமர் ரோச் 16 ஓட்டங்களுடன் ரஷாக்கின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ராம்போலை அப்ரிடி வெளியேற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி 43.3 ஓவர்களில் 112 ஓட்டங்களை எடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் பொறுப்பான ஆட்டம் வழங்கிய சிவ் நாராயணன் சந்தர்போல் 106 பந்துகளில் (ஒரு சிக்ஸர் உட்பட) 44 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.


பந்துவீச்சில் அணித்தலைவர் சகிட் அப்ரிடி 9.3 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 30 ஓட்டங்களைக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் மொகமட் ஹபீஸ், சஜிட் அஜ்மல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் உமர்குல், ரஷாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 113 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு கம்ரான் அக்மல்-முகமெட் ஹபீஸ் ஜோடி அசத்தல் ஆரம்பம் வழங்கியது.

இந்த ஜோடியின் சிறப்பான ஆட்டத்தின் முன் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகங்களின் பந்து வீச்சு எடுபடவில்லை.

இதில்மொகமெட்ஹபீஸ்ஒருநாள் அரங்கில் தனது 8ஆவது அரைச் சதத்தைக்கடந்தார்.

இந் நிலையில் பாகிஸ்தான் 20.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்கைக் குவித்து 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் பாகிஸ்தான் அணிஅரையிறுதிசுற்றுக்குமுன்னேறியது.



துடுப்பாட்டத்தில் முகமெட் ஹபீஸ் 64 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 61 ஓட்டங்களையும் கம்ரான் அக்மல் 61 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 47 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு சகல துறையிலும் ஜொலித்த மொகமெட் ஹபீஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை
வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA UK
3. மைக்ரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

இறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்
1. ..........................
2. ..........................
பெயர்: ..........................
முகவரி: ..........................
..........................
தொ.பே: ..........................
தே.அ.அ.இல: ..........................
சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.
அனுப்ப வேண்டிய முகவரி
"உலகக் கிண்ணம்"
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06, ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி ?
பத்தாவது உலகக்கிண்ணத் தொடரில் குறைந்த ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையுமிழந்த அணி?
..........................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 26.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..........................
முகவரி:- ..........................
..........................
தொ.பே:- ..........................
தே.அ.அ.இல:- ..........................
அனுப்ப வேண்டிய முகவரி
"உலகக் கிண்ணம்"
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்க 13ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் தலைவர் ச.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இவ்வாண்டுக்கான செயற்குழு தெரிவும் பாடசாலை அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளதால் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு செயலாளர் இ.தனுசன் அறிவித்துள்ளார். (3)

## உணவகத்தில் திருட்டு

(கொழும்புத்துறை)

உணவகத்தில் திருட முற்பட்டவர் பொலிஸாரால் நையப்புடைக்கப்பட்டார்.

பருத்தித்துறை சாரையடியிலுள்ள உணவகமொன்றில் நேற்று காலை திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட நபரை பருத்தித்துறைப் பொலிஸார் நையப்புடைத்ததுடன் அவரைக் கைதுசெய்துள்ளனர். (3-6-51)

## பாலைதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா

(குருநகர்)

யாழ்ப்பாணம் குருநகர் இறங்குதுறையிலிருந்து 18 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாலைதீவு புனித அந்தோனியார் வருடாந்த உற்சவ விழா எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. திருநாள் ஆயத்த தினமான 26ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு சிலுவைப்பாதை ஆராதனையுடன் நற்கருணைப் பவனியும் இடம்பெறவுள்ளது.

திருநாள் திருப்பலி காலை 6 மணி, 8 மணி, 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டுத் திருப்பலி யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

பக்தர்களின் போக்குவரத்து வசதிகள் குருநகர் இறங்குதுறையிலிருந்து இயந்திரப் படகுகள் செல்ல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (3-39)

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வேலணை வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போசகராக சின்னையா சிவராசா, தலைவராக டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி, உபதலைவராக க.பாஸ்கரன், செயலாளராக க.மார்க்கண்டுதாசன், உப செயலாளராக சோ.காந்தரூபன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (2)

## நெல்லியடி இலங்கை வங்கிக் கட்டடம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி இலங்கை வங்கியின் புதிய நவீன கட்டடம் இலங்கை வங்கித் தலைமைக் காரியாலய நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது.

நெல்லியடி இலங்கைவங்கி தற்பொழுது நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் இயங்கி வருகின்றது.

இக்கட்டடம் மிகவிரைவில் கொடிகாமம் வீதியிலுள்ள லக்ஷ்மி திரையரங்கு இயங்கிய இடத்தில் சுமார் 50 மில்லியன் ரூபாய் செலவில் மூன்று தொடர் மாடி கொண்ட நவீன வசதியுடைய இலங்கை வங்கி நிர்மாணிக்கப்படவுள்ளது. (3-24)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய நபருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கரவெட்டி)

சாவகச்சேரி நகரப்பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகன சாரதிக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் 3 மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சாவகச்சேரி நகரப்பகுயில் நேற்று முன்தினம் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மண்ணை ஏற்றி வந்த சாரதியை சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் எஸ்.கணபதிப்பிள்ளை சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தையும் செலுத்தத் தவறின் 3 மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்ததுடன் வாகனம் தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வாகனத்தை இருபது இலட்சம் ரூபாய் பெறுமதியான பிணைமுறியில் எடுக்க பதில் நீதிவான் உத்தரவிட்டார். (3-24)

## வீதிகளில் குப்பை கொட்டப்படுவதால் தொற்றுநோய் பரவும் அபாயம்

(கொழும்புத்துறை)

வல்வெட்டித்துறை கொம்மந்தறை நிக்கெழு வைரவர் கோயில் பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்றுநோய் பரவும் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வெற்றுக் காணிகளை நிரவும் நோக்கில் கழிவுப் பொருட்கள் நாளாந்தம் கொட்டப்படுவதால் சூழல் மாசடையும் தன்மை மற்றும் தொற்றுநோய் அபாயம் உள்ளதாக பருத்தித்துறை நகரசபையிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-51)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு அபராதம் விதிப்பு

சாவகச்சேரி நகரப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 3 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி சாரதி நேற்று முன்தினம் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியவேளை கைதுசெய்த பொலிஸார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் மேற்படி அபராதத்தைச் செலுத்த உத்தரவிட்டார். (4-3-24)

## இரண்டு வருடங்களுக்கு முன் உயிரிழந்தவர் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியில் கடந்த 2009ஆம் ஆண்டு வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்த நபருடைய வழக்கு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் உடுப்பிட்டி வதிரி வீதியில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய வாகனச் சாரதியை நேற்றைய தினம் வல்வெட்டித்துறைப் பொலிஸார் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் தனது தீர்ப்பில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு 2 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கவும் ஏனைய அபராதமாக 8ஆயிரம் செலுத்துமாறும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். (3-24)

## ஊக்குவிப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமராட்சி மக்களின் மீன்பிடி விவசாயத்துறை தொழில்களை ஊக்குவிப்பதற்கு 60 மில்லியன் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கியின் நெல்லியடி முகாமையாளர் ஜி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

மேற்படி தொழிலை ஊக்குவிப்பதற்கு இதுவரை 425 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (4-3-24)

## மணவாளக்கோல உற்சவமும் நூல் வெளியீடும்

கருணைமிகு காமாட்சியம்பாள் ஆலயத்தின் மணவாளக்கோல உற்சவமும் 'கருணை நிறை காமாட்சி' நூல் வெளியீடும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கணக்கியற்றுறை தலைவர் பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார்.

மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் வழங்கவுள்ளார்.

நூலின் முதற்பிரதியை நீர்வேலி பவானி களஞ்சிய உரிமையாளர் பொ.கிருஷ்ணானந்தன் பெறவுள்ளார். (3)

## இரு வெவ்வேறு விபத்து சம்பவங்களில் இருவர் படுகாயம்

வடமராட்சியில் இரு வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன.


யாழ்.பருத்தித்துறை வீதியில் மந்திகை சந்தையடியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் துவிச்சக்கரவண்டியில் வந்த வயோதிபருடன் மோதியது.

இதில் அல்வாய் கிழக்கு அத்தாய் பகுதியைச் சேர்ந்த தாமு கனகசபை (வயது 73) என்ற வயோதிபர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருகிறார்.

மற்றுமொரு சம்பவத்தில் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு கரணவாய் கரவெட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவத்தில் மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த ஜெயராஜ் மேனகன் (வயது 25) என்ற இளைஞரும் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருகிறார். (3-24)

யாழ்.செய்திகள்






தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி நேற்று பாதுகாப்பு படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சிரமதானப் பணியை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க யாழ்.புகையிரத வளாகத்தில் ஆரம்பித்து வைத்தார். இதனையொட்டி இடம்பெற்ற நிகழ்வில் வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர்.கேதீஸ்வரன், கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் உரையாற்றுவதனையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர சபையினால் நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் கடைப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் ஏற்பாட்டில் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை யாட்டி யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் நோக்குடன் ஒலிபெருக்கிகள்மூலம் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகர்சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகவும் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் வீதிகளில் குப்பைகள் போடப்படுகின்றன.

இதனால் யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவினர்களுக்கு பாரிய சிரமம் ஏற்படுகிறதோடு நகரையும் சுத்தமாக வைத்திருக்க முடியாதுள்ளது.

மக்களின் ஒத்துழைப்புமூலமே நகரை சுத்தமான முறையில் வைத்திருக்க முடியும்.

எனவே மக்கள் அனைவரும் சுகாதாரத்திற்கு சீர்கேடு ஏற்படாத வகையில் தமது வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை பொதியிட்டு சுகாதாரப் பிரிவினர்கள் வாகனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

இதன்மூலம் நுளம்பு பெருகுவதை கட்டுப்படுத்துவது மட்டுமல்லாது சுகாதாரத்தையும் பேணிப் பாதுகாக்க முடியும் என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இந்த ஒலிபெருக்கி அறிவுறுத்தல் பணி தொடர்ந்து ஒரு வாரத்திற்கு இடம்பெறும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (2-6)

# வன்னேரிக்குளம் ம.வி.க்கு தளபாடம் கையளிப்பு



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியின் பணிப்பிற்கு அமைய கடந்த 19 ஆம் திகதி அதிபர், ஆசிரியர்களின் பாவனைக்காக மேசைகள், கதிரைகள் என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் இப்பாடசாலையின் ஏனைய குறைபாடுகளும் விரைவில் கவனத்திற் கொள்ளப்பட்டு கல்விசார் மற்றும் ஏனைய வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும் என பாடசாலை அதிபருக்கு ஆளுநர் உறுதியளித்துள்ளார். (2)

# வெளிநாட்டு மாணவர்களின் வருகையை கட்டுப்படுத்த பிரிட்டன் அரசாங்கம் முடிவு

இங்கிலாந்து நாட்டில் கல்வி பயில வரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த அந்த நாட்டுஅரசு முடிவு செய்துள்ளது. உயர்கல்வி படிப்பதற்காக ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு மாணவர்கள் செல்வது வழக்கம். மேலும் அந்த நாடுகளுக்கு செல்லும் மாணவர்கள் முறையான விசா மற்றும் முறையற்ற விசாமூலமும் செல்வதால் இருநாடுகளிடையேயான உறவில் சிக்கல் எழுகின்றன.

இதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகளை இங்கிலாந்து அரசும் முயன்றுவருகிறது. உலகம் முழுவதிலும் இருந்து ஆண்டு தோறும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டோர் உயர்கல்விபடிக்க இங்கிலாந்திற்கு வருகின்றனர்.

இந்த எண்ணிக்கையை குறைப்பதற்காக முதற்கட்டமாக வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுக்கும் போலியான கல்வி நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு மாணவர்களில் 7 பேரில் ஒருவர் போலியான கல்வி நிறுவனங் களில் பயின்று வருகின்றனர் என ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

மேலும் வெளிநாட்டில் இருந்து மாணவர்களுக்கு ஆங்கில அறிவு கட்டாயமாக இருக்க வேண்டும். வெளிநாட்டு மாணவர்களில் குறிப்பாக சீனா, இந்தியா போன்ற நாட்டில் இருந்து செல்லும் மாணவர்களின் ஆங்கில அறிவு குறைவாக இருப்பதால் இங்கிலாந்து மாணவர்களுடன் ஒன்று சேர முடியாமல் அவர் களுடன் பழக முடியாமல் தனித்து விடப்படுகின்றனர்.

இதனால் இனவெறி போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இதனை தவிர்க்கும் முகமாக விசா வழங்கும் படிவத்தில் ஆங்கில அறிவு கட்டாயம் என்ற விதியை சேர்க்கும் பட்சத்தில் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்று அந்த நாட்டு அரசு நம்புகின்றது. (2-4)

# இரகசிய தகவல் மூலம் ஒரேநாளில் 40 இலட்சம் டொலர் சம்பாதிப்பு

இலங்கையை சேர்ந்த அமெரிக்க கோடீஸ்வர வர்த்தகரான ராஜ் ராஜரட்ணம் ஹில்டன் ஹோட்டல் தொடர்பாக கிடைத்த இரகசிய தகவல் மூலம் பங்குச் சந்தையில் ஒரே நாளில் 40 இலட்சம் டொலர் இலாபமீட்டியதாக அமெரிக்க நீதிமன்றமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த ஹோட்டலை பிளக்ஸ்டோன் குழும நிறுவனம் வாங்கியபோது இது நடந்ததாகவும் அமெரிக்க இந்தியர்கள் இருவர் இதில் சம்பந்தப்பட்டதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

உள்வீட்டு இரகசிய தகவல்களை பெற்று பங்குச்சந்தையில் முறையற்ற விதமாக இலாப மீட்டினார் என ராஜ்ரட்ணம் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

உரையாடல்கள் அடங்கிய ஒலி நாடாக்களும் நீதிமன்றில் செவிமடுக்கப்பட்டன. இதன் மூலம் இன்டெல் நிறுவனமுன்னாள் தலைவர் ராஜீவ் கோயல் எவ்வாறு இரகசிய தகவல்களை ராஜ் ராஜரட்ணத்திற்கு வழங்கினார் என்பதை வழக்குத் தொடுநர்கள் வெளிப்படுத்தினர். இவ்வழக்கில் தான் குற்றவாளி என ராஜீவ் கோயல் ஏற்கெனவே ஒப்புக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்ட இலங்கையருக்கு அகதி அந்தஸ்து

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் புகலிடம் மறுக்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த இரு புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரையும் இலங்கைக்கு நாடு கடத்துவதால் ஆபத்து ஏற்படும்எனக்கருதி அவர்களுக்கு புகலிடம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

விமானம் அல்லது படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஒரே விதமான சட்டங்களே அமுல்படுத்தப்படும் என அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிறிஸ்மஸ் தீவில் உள்ள 89 பேர் நாடுகடத்தப்படுவர் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக கிறிஸ்மஸ் தீவுகளில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் ஆரோக்கியமானதல்ல என அந்நாட்டு எதிர்க் கட்சிகள் தெரிவித்திருந்தன. (2-4)

# கலைப்பண்பாட்டு விழா

கோப்பாய் கலை பண்பாட்டு மன்றம் நடாத்தும் கலைப்பண்பாட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/கிறிஸ்தவ கல்லூரி சேனாதிராசா அரங்கில் இம்மன்ற டாக்டர் லயன் வை.தியாகராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியர் எஸ் சிவலிங்கராசா, வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், பிரபல வர்த்தக லயன் ஏ.எம் ரி தனநாயகம், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி பிரதேச பொறுப்பாளர் இ.ஐங்கரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே யோகநாதன், ஆசிரியர் பயிற் சிக்கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை, யா/கிறிஸ்தவ கல்லூரி அதிபர் இ.இராசசேகரம் ஆகியோர் கலந்து கொள்வர். (2)



வடமாகாண தொழில் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக விளக்கம் வழங்கும் கலந்துரை யாடல் நேற்று ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு வடமாகாண தொழில் திணைக்களப் பணிப்பாளர் கே.விஸ்வலிங்கம் விளக்கமளிப்பதையும் படத்தில் காணலாம். *(படம் :- என்.குமார்)*

# மன்னார் கரையோர பகுதியில் கடல் பெருக்கெடுப்பு

(கொழும்பு)

மன்னார் தென்கடல் பழைய பாலம் தொடக்கம் தாழ்வுப்பாடு வரையான கரையோர பகுதியில் கடல் பெருக்கெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடலானது வழமைக்கு மாறாக சுமார் 300 மீற்றர் தொடக்கம் 400 மீற்றர் வரை பெருக்கெடுத்துள்ளது. அத்துடன் தொடர்ந்து கடல் பெருக்கெடுத்துக் கொண்டிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, இப்பிரதேசத்தைப் பார்வையிட்ட பிரதேச செயலர் திருமதி ஸ்டாலின் டிமெல் கடல் பெருக்கெடுப்பதை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தாழ்வுப்பகுதிகளை மண்போட்டு நிரப்புமாறு மக்களிடம் தெரிவித்துள்ளார். (2-4)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 10.01.1925
உதிர்வு 23.02.2011

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் ஐயாத்துரை சிவசுவாமி ஐயா
(சங்கீத கலாபூஷணம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 25.03.2011 வெள்ளிக்கிழமை காலை 5.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி.

இங்ஙனம்
இளைய மகள் குடும்பத்தினர்

(4203)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூன்றாவது மனிதன்

ஒரு அப்பா தன்னுடைய மகனுக்கு புத்திமதி சொன்னாராம். "இதோ பாரப்பா நீ அடிக்கடி நண்பர்களுடன் சேர்ந்து குடிப்பதாக கேள்விப்பட்டேன். உன்னை நான் குடிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அது அளவுக்கு மீறிப்போகாமல் பார்த்துக்கொள். இப்ப உதாரணத்துக்கு அதோ பார்... அங்கே வந்து கொண்டிருக்கும் இரண்டுபேர் உன்கண்ணுக்கு நான்குபேராக தெரியுமளவுக்கு குடித்து விடாதே..... அதுதான் நான் உனக்கு சொல்லவிரும்பும் புத்திமதி" என்றார்.

அப்பா... இப்ப அங்கே வந்து கொண்டிருப்பதே ஒரு ஆள்தான் அப்பா என்றான் அந்த மகன் .

இதற்கு என்ன அர்த்தம்?

புத்தி சொல்லும் அப்பாவும் தண்ணிபோட்டிருக்கிறார். மதுப் பழக்கம் உள்ளவர்களைப் பார்த்து மற்றவர்கள் கேட்கும் ஒரு கேள்வி "இப்ப நீ ஒரு ஆளா இருக்கிறாயா? இரண்டு ஆளாய் இருக்கிறாயா?

ஒரு சமயம் இதேமாதிரி என்னைப்பார்த்து ஒருதர் கேட்டார். நீ எத்தனை ஆள்?

நான் இரண்டுபக்கமும் திரும்பி பார்த்துவிட்டு சொன்னேன்.

"நாள் ஒரு ஆள் தான்."

"அப்படிச் சொல்லாதே... நீ ஒரு ஆள் இல்லை. மூன்று ஆள்"

"அதெப்படி ?"

''உன்னைப்பற்றி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாயோ... அது ஒரு ஆள். உன்னைப்பற்றி நான் என்ன நினைத்துக் கொள்கிறேனோ அது இன்னொரு ஆள். நம் இருவருக்கும் தெரியாமல் உனக்குள் ஒருவன் இருக்கின்றான். அது மூன்றாவது ஆள்" என்றார்.

சில நாட்கள் கழித்து அதற்கு அர்த்தம் தெரிகிறமாதிரி ஒரு சம்பவம் நடந்தது.

சிறிதுகாலம் நான் மயிலாப்பூரில் குடியிருந்தேன். இரவில் கண்விழித்து ஏதாவது எழுதிக்கொண்டிருப்பேன். அந்தச் சமயம் தூக்கம் வருவதுபோல் தெரிந்தால் வீட்டைவிட்டு வெளியில் வந்து இரவிலும் திறந்திருக்கும் தேநீர்கடைக்குப்போய் தேநீர்அருந்திவிட்டு திரும்பி வருவது வழக்கம்.

அப்படி ஒருநாள் நள்ளிரவு நேரம் நான் தேநீர் அருந்திவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது ஒருத்தர் அவசரமாக ஓடி வந்தார்.

''என்னங்க ... ஏன் இப்படிப்பு பரபரக்க ஓடிவாறிங்க?'' என்றேன்.

"பாட்டிக்கு உடம்பு சரியில்லை. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக ஒரு ஆட்டோ வேண்டும்" என்றார்.

சரிவாங்க பார்க்கலாம் என்று ஆட்டோ ஸ்ராண்ட் பக்கம் போனோம். இந்த நள்ளிரவு நேரத்தில் யாருமே இல்லை. ஒரு ஆட்டோவில் அதன் டிரைவர் தூங்கிக் கொண்டிருந்தார். அவரை தட்டி எழுப்பினோம்.

"ஐயா அவசரம்... ராயப்பேட்டை வரைக்கும் போக வேண்டும்"

"வேறுயாரையாவது பார் போ என்று சொல்லிவிட்டு மறுபடியும் கண்ணை மூடினார்.

வேறுயாருமில்லை. ரொம்ப அவசரம். எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள்.

200 ரூபாய் தருவியா?

சாதாரணமாக 25 ரூபா போகவேண்டிய தூரம்.

இப்படியும் ஒரு மனுசனா? என்று மனதுக்குள் வெறுப்பு இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல்

சரி வாங்கிக்கொள் வா என்று அழைத்துக் கொண்டு போனோம்.

பாட்டியை மெதுவாக ஆட்டோவில் உட்கார வைத்தார்கள். ஆட்டோ பறந்தது.

போகும்போதே அந்தப்பாட்டியின் அவஸ்தையை அந்த டிரைவர் உணர்ந்து கொண்டுதான் போனார்.

ராயப்பேட்டை ஆஸ்பத்திரி....

பாட்டியை ஆட்டோவிலிருந்து இறக்கவும் மெல்ல நடத்தி உள்ளே கொண்டு போகவும் அந்த டிரைவரும் கைகொடுத்தார். உள்ளே கொண்டு போய்விட்டுவிட்டு வெளியே வந்தார். அந்த பாட்டியின் உறவினர் வெளியே வந்து டிரைவரிடம் ஏற்கனவே பேசிய படி 200 ரூபாவை நீட்டினார் .

இப்போது அந்த டிரைவர் கையெடுத்துக் கும்பிட்டு, ''ஐயா எனக்குப் பணம் வேண்டாம். இது நான் அந்தப் பாட்டிக்கு செய்த உதவியாக இருக்கட்டும் என்று சொல்லிவிட்டு பதிலுக்குக் கூட காத்திராது ஆட்டோவை எடுத்துக் கொண்டுபோய்விட்டார்.

இந்தச் சம்பவத்தை நான் அதன் பிறகு சிந்தித்துப் பார்த்தேன். இப்பொழுது எனக்கு அந்த மூன்று மனிதர்களை அடையாளம் தெரிந்தது.

'' 200 ரூபா கொடுத்தால்தான் வருவேன்'' என்று சொன்னானே அவன் முதலாள்.

''இப்படியும் ஒரு மனுசனா? என்று நினைத்தோமே அது இரண்டாவது ஆள்.

உண்மையான அந்த மூன்றாவது மனிதன் ராயப்பேட்டையில் தான் வெளியே வந்தான்.

நம் ஒருவரிடமும் அந்த மூன்றாவது மனிதன் இருக்கிறான். அவனை அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

*உடுவில்மகளிர் கல்லூரி*

ஆங்கிலமொழி மூலம்

சி.பிரதக்சனா(6ஏ, பி, 2சி),ப.சயானி (5ஏ,2பி,2சி), கா.துவார கா (5ஏ,பி,2சி,எஸ்), இ.ஜெயறேமினா( 3ஏ,2பி,2சி), ர.திசானா (2ஏ,3பி,2சி), மி.பிலோகமலினி (ஏ,3சி, 4எஸ்).

தமிழ்மொழி மூலம்

சி.சாலினி (9ஏ), சி.காயத்திரி (6ஏ,3பி), ரா.கம்சிகா (6ஏ,2பி,சி), இ.பிரியதர்சினி (6ஏ, 3பி), உ.தக்சாயினி (6ஏ, 3சி), சி.கோவிதா (5ஏ,4பி),பா.பிரியங்கா(5ஏ,பி,3சி), அ.நிலோஜினி (5ஏ,3பி,சி), பே.செரோன்டிலக்சி (5ஏ,3பி,சி), ர.சோபிக்கா(5ஏ,பி, 2சி,எஸ்), ம.துஷியா (5ஏ,2பி, 2சி), உ.டிலக்சனா(4ஏ,4பி, சி), டே.இவாஞ்சலின்டிலாந்தி (4ஏ, 5பி), க.சாகித்தியா (4ஏ,2பி, 3சி), ந.சறேமிக்கா (4ஏ,பி,4சி), சி.தர்ஷினி(4ஏ,பி,3சி,எஸ்),சி.துளசிகா (4ஏ,4பி,சி), க.காஞ்சனா (3ஏ,2பி, 4சி), ர.மதுரிக்கா (3ஏ,2பி, 3சி, எஸ்), உ.நிரேயிதா (3ஏ, பி,5சி),ர.சரோமி (3ஏ,4சி, எஸ்), இ.சிந்தியா (3ஏ,4பி, 2சி),சே.தபித்தா (3ஏ,3பி, சி,2 எஸ்), ப.பேபிவித்தியா (3ஏ,2பி ,3சி,எஸ்), யோ.ஜான் மடே ரனா( 3ஏ,3பி,2சி,எஸ்

*யா/அச்சுவேலி மத்திய கல்லூரி*

இகஸ்தூரிராஜன்(8ஏ,பி), பே.கஜமுகன்(7ஏ,பி, எஸ்), செ.தனுஜன்(5ஏ,2பி, 2சி), சு.கலைவரதன்(5ஏ,2பி,2சி) சி.மேரிதர்மஸ்ரீ(5ஏ,பி,2சி, எஸ்), ஞா.மயூரதாசன் (4ஏ,3பி,சி),கா.கீர்த்தனா (4ஏ,3சி,2எஸ்), த.பவீந்திரன் (3ஏ,3பி,சி,எஸ்), இ.விதுசா (3ஏ,2பி,3சி, எஸ்), வி.கம்சாயினி (3ஏ, 4சி, எஸ்) (2-3)

# பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூயதிய நம்பிக்கைநிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்தியகல்லூரி மண்டபத்தில் மாவட்ட ஓய்வூதிய சங்கத்தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சிறப்புவிருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ப.ஜெயராசா கலந்து கொள்ளவுள்ளார். மாவட்டத்திலுள்ள சகல அரச ஓய்வூதியர்களையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-84)

# தேசியமட்டத்திலான ஹொக்கி சுற்றுப் போட்டி

யாழ்.மாவட்டத்திலிருந்து தேசியமட்ட ஹொக்கி சுற்றுப் போட்டிக்கு 15 வயதுக்குட்பட்ட ஹொக்கி அணியினர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் மாத்தளைக்கு செல்லவுள்ளனர் . இப்போட்டிக்கு யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலிருந்து இரண்டு அணிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இதில் ஆண்கள் பிரிவுக்கு யாழ்ப்பாணக்கல்லூரியும் சென்ஜோன்ஸ் கல்லூரியும் பெண்கள் பிரிவிற்கு உடுவில் மகளிர் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் தெரிவாகியுள்ளன. மேற்படி போட்டிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து முதற் தடவையாக அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 160 |
| தக்காளி | 50-60 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 90 | 90 | 80 |
| கரட் | 120 | 200 | 200 | 100 |
| பூசணி | 40 | 60 | 70 | 60 |
| புடோல் | 50 | 80 | 100 | 90 |
| வாழைக்காய் | 40-50 | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 80 | 70 |
| பாகற்காய் | 110 | 130 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80-90 | 60 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 | - |
| பயற்றங்காய் | 70 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 100-120 | 120 | 140 | 130 |
| பீற்றூட் | 50-60 | 50 | 100 | 80 |
| கறிமிளகாய் | - | 150 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 500 | 480 |
| போஞ்சி | 100 | 100 | 140 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

# அதிபர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயப்பாடசாலை அதிபர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்

எனவே, யாழ்.வலய பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார் (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*24.03.2011*
*(பங்குனி 10,வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு*
*பஞ்சமி பிற்பகல் 2.01 மணிவரை*
*அனுசம் பின்னிரவு 2.43 மணிவரை*
*இராகுகாலம் 1.46-3.16 மணிவரை*
*சுப நேரம் 7.46-9.16 மணிவரை*

**மேடம்** குழப்பம் தீரகுருவை வழிபடவேண்டிய நாள் ,உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது, பணவிரயம் அதிகரிக்கும்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுப்பீர்கள்.

**மிதுனம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், உடல்நலம் சீராகும்,வீட்டைப்பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

**கடகம்** மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள்,கூட்டாளிகளுடன் ஏற்பட்ட பகை மாறும், பிள்ளைகள் வழியில் பெருமையடையும் நாள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்படையும்நாள், தாய்வழி அனுகூலமுண்டு, வங்கிச்சேமிப்பை உயர்த்தும் எண்ணம் தோன்றும். வாகனயோகமுண்டு.

**கன்னி** எடுத்த செயலை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், உடன்பிறப்புக்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள்,தன்னம்பிக்கை உயரும் நாள்.

**துலாம்** எதிர்பாராத தனலாபம் கிடைக்கலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கலாம்,

**விருச்சிகம்** விழாக்களில் கலந்து கொள்ளும் சூழ்நிலை அமையலாம், பண வரவு திருப்திதரும்,குருவழிபாடு குதூகலம் தரும்,நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள்,நண்பர்வழியில் சிறு இலாபம் ஏற்படலாம்,திட்டமிட்ட பயணமொன்றில் திடீர்மாற்றம் செய்வீர்கள்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சரியாக நடைபெறும், தொழில் ரீதியாக புதிய சிந்தனைகள் தோன்றும், விட்டுத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரும்நாள், வீடு, இடம் வாங்கும் எண்ணம் மேலோங்கும், நீண்ட நாளைய ஆசை நிறைவேறும், பிறர் உதவிகள் கிடைக்கலாம்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள்,தடைப்பட்டகாரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தொழில்ரீதியான பயணம் அனுகூலம் தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

15

## காசநோயிற்கான சிகிச்சை



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

**ஐ. மேற்பார்வையிடல் தரிசிப்புகளை நடைமுறைப்படுத்தல்.**

வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளிகள் இனம் காணப்படுகின்றனரா? என மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். காசநோயாளருடன் தொடர்புடையோரிலும் தொற்று உள்ளதா எனப் பரிசோதிக்கப்படுகின்றனரா என்பவற்றை அவதானித்து ஊக்கப்படுத்தல் வேண்டும். வைத்தியசாலைகளில் சுகாதார உத்தியோகத்தர்கள்; காசநோயாளரைக் கண்டறிதலில்,

1. காசநோய் இருக்குமென உள்ளோரைச் சரியாக இனம் கண்டு சளிப்பரிசோதனைக்கு அனுப்புதல் வேண்டும்.

2. சளிப்பரிசோதனைக்குரிய படிவத்தினை நிரப்புதல் வேண்டும்.

3. சளியினைச் சேகரித்து, விபரங்களைப் பாத்திரத்தின் பக்கத்தில் ஒட்டி, நுணுக்குக்காட்டிச் சோதனைக்கு அனுப்புதல் வேண்டும்.

4. காசநோயாளருடன் தொடர்புடையோரில் நோய் அறிகுறிகள் காணப்படின்; மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**சிகிச்சையின் போது பேண வேண்டியவை பற்றி மேற்பார்வையிட வேண்டும்.**

1. சிகிச்சை அட்டையினை உபயோகித்தல்.

2. சரியான வகை, அளவு மருந்துகளைக் கொடுத்தல்.

3.நோயாளி மருந்துகளை விழுங்குவதை அவதானித்தல், ஊசிமருந்து கொடுப்பதாயின்; மருந்துகளைக் குடித்தபின் போட வேண்டும்.

4.தூய தொற்று நீக்கிய ஊசியினைப் பாவித்தல்.

5. நோயாளி சிகிச்சைபெறும் முழுக்காலமும் அறிவூட்டலினைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல்.

6. நோயாளிகளைச் சளிப்பரிசோதனைக்குச் சரியான நேரத்தில் அனுப்புதல்.

7. மருந்து எடுக்க வருதலை இடை நிறுத்திய நோயாளிகளைக் கண்டுபிடித்தல்.

**நோயாளி தொடர்பாகவும் சிகிச்சை தொடர்பாகவும் உள்ள அறிவு பற்றி மேற்பார்வையில் பரிசோதிக்க வேண்டும்.**

1.நோயாளி; தான் எடுக்கும் மருந்துகளின் வகை, நிறம் ஆகியவற்றைத் தெரிந்துள்ளாரா?எவ்வளவு காலம் மருந்து எடுக்க வேண்டும்? பரிந்துரைத்த எல்லா மருந்துகளையும் எடுக்கவேண்டியதன் முக்கியத்துவம், பொதுவான பக்கவிளைவுகள் ஏற்படின் என்ன செய்வது?

2. நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பத்தில் சிகிச்சை பெறுவதன் முக்கியத்துவம்.

3. சளிப்பரிசோதனை செய்வதன் முக்கியத்துவமும், சளிப்பரிசோதனை முடிவுகளின் விளக்கமும்.

4. நோய் அறிகுறிகள் பற்றிய அறிவும், தொற்றும் தன்மை பற்றிய அறிவும்.

5. நெருங்கிப் பழகியவர்கள் பரிசோதிக்கப்படல் முக்கியம் என்பது பற்றிய அறிவு.

6. பொருட்கள் போதியளவில் மருந்துகள், ஊசிகள், சளிப்பரிசோதனைப் பாத்திரம் என்பன உள்ளன.

7. சளிப்பரிசோதனைக்கு நிரப்பும் படிவம், போதியளவு உள்ளதா? எனப் பார்த்தல்.

**மேற்பார்வையிடல் நடவடிக்கையில்**

1. சிகிச்சை அட்டைகளைப் பரிசீலிக்க வேண்டும்.

2. சுகாதார உத்தியோகத்தர் நோயாளருக்கு மருந்து கொடுப்பதை அவதானித்தல்.

3. சுகாதார உத்தியோகத்தர்களுடன் கதைத்தல்.

4. நோயாளிகளுடன் கதைத்தல்.

5. மருந்து விநியோகத்தைப் பரிசோதித்தல்.

நுணுக்குக் காட்டி நிலையத்தில்

சிறுவர்கள் அல்லாத வெளிநோயாளிகளில் 2% காசநோய் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு, சளிப்பரிசோதனை செய்ய வேண்டும். சளியினை எடுப்பதற்குச் சூரிய ஒளிபடும் வெளியில் ஓர் இடம் ஒதுக்கப்படல் வேண்டும்.

**ஒ.நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சையினை நடைமுறைப்படுத்தல்**

1.நுணுக்குக்காட்டி நிலையங்களை உருவாக்கல்.

2.ஏனைய சுகாதர சேவைகளுடன் ஒன்றிணைதல்.

3.மருத்துவ விநியோகத்தை பலப்படுத்தல்.

4.சுகாதர உத்தியோகத்தர்களைப் பயிற்சிவிக்க வேண்டும்.

சிறப்பாக நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சையின் சளியில் கிருமி இல்லாது போகும் வீதம்:2 மாதத்திற்கு 90%க்கு மேல் இருக்கும். குணமடையும் வீதம்:90க்குமேல் இருக்கும். நோயாளிகளைக் கண்டு பிடிக்கும் வீதம் 90%க்கு மேல் இருக்கும்.

ஒரு பிரதேசத்தின் குணமடையும் வீதம் 90% இனைத் தாண்டிய பின்பே ஏனைய நோயாளிகளைக் கண்டறிய முயற்சிக்க வேண்டும்.

காசநோயாளிகளுக்கான குறுகிய கால நேரடி அவதானிப்பின் கீழான சிகிச்சை நடைமுறைப்படுத்தல்.

01. காசநோய்க்குரிய அறிகுறிகளான இரண்டு கிழமைக்கு மேற்பட்ட இருமல், உடல் மெலிதல் , மாலைநேரக் காய்ச்சல், இருமலுடன் இரத்தம் போதல் என்பன காணப்படின் அவர்களை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு சளிச்சோதனைக்கு வழி காட்டவும்.

02.சிகிச்சை பெறும் காசநோயாளருடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களை சளிச் சோதனைக்கு வழிகாட்டவும்.

03.சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட நோயாளிக்கு முதல் மருந்து மார்புநோய்ச்சிகிச்சை நிலையத்தில் அளிக்கப்பட்டு, பின் நோயாளிக்கு மிக அருகில் உள்ள சிகிச்சை நிலையத்தில் அளிக்கப்படும்.

04.நோயாளிகள் தினமும் அச்சிகிச்சை நிலையத்திற்கு வந்து தங்களுக்குரிய மருந்துகளை சுகாதார உத்தியோகத்தர் முன்னிலையில் உட்கொள்ளுவார்.

05.மாவட்டத்திலுள்ள சகல வைத்திய சாலைகளும், நேரடி அவதானிப்பில் சிகிச்சை வழங்கும் மையங்களாக அமையும்.

06.ஒவ்வொரு நோயாளிக்கும் உரிய மருந்துகள் மாவட்ட காசநோய் தடுப்புப்பிரிவினால் சிகிச்சை வழங்கும் மையங்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

(தொடரும்)

# நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க மின்சக்தி மிகவும் அவசியமானதாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



லக்விஜய அலை மின்சார நிலையம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்ததாகும். 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை நாம் எமது தாய் நாட்டை படிப்படியாக அபிவிருத்தியின் பால் இட்டு சென்றுள்ளோம். இந்த மின்சார நிலையத்தை திறப்பதன் மூலம் நாட்டின் பல துறைகள் முன்னேற்றமடையவுள்ளது. 1980 ஆம் ஆண்டு முதல் இதன் தேவை இருந்தது.

ஆனால் அரசியல் ரீதியில் தோல்வி காணும் என்பதால் இது நடைமுறைப் படுத்தப்படாமலிருந்தது. நாம் சிரமங்களுக்கு மத்தியில் தான் மக்களுக்கான பணிகளை செய்கின் றோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புத்தளம் நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்ட அனல் மின்சார நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முதற்கட்டமாக தேசிய மின்சாரத்துக்கு 300 மெகா வோற் மின்சாரம் இந்த அனல் மின் நிலையத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. சீன அரசாங்கத்தின் உதவியின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மேலும் பேசுகையில் ,நாட்டின் அபிவிருத்தியினை முன்னெடுத்து செல்வதற்கு மின்சக்தி என்பது மிகவும் முக்கியமானது.சோவியத் ரஷ்யா, ஏனைய நாடுகளை எடுத்துக் கொண்டாலும் எல்லா நாடுகளும் மின்சாரத்தை மையப்படுத்தியே முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

எனக்கு ஞாபகமிருக்கின்றது. அன்று ஆட்சியில் இருந்த அரசாங்கம் இத்திட்டத்தை பின் தள்ளிக் கொண்டிருந்தது. 1980 ஆம் ஆண்டு முதல் இதன் தேவை இருந்தது. ஆனால் அரசியல் ரீதியில் தோல்வி காணும் என்பதால் இதனை நடைமுறைப்படுத்தப் படாமலிருந்தது. நாம் சிரமங்களுக்கு மத்தியில் தான் மக்களுக்கான பணிகளை செய்கின்றோம்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நாம் போர் தொடுத்து கொண்டிருக்கும் போது 2006 ஆம் ஆண்டு தான் அதற்கான அடிக்கல்லை நாட்டினோம். இது மட்டுமல்ல கெரவலபிட்டி, மேல் கொத்மலை இவ்வருட இறுதியில் அவற்றை நிறைவு செய்வோம்.

இந்த மின்நிலையம் 2014 ஆம் ஆண்டு வரும் போது 600 மெகா வோற் உற்பத்தி செய்யப்படும் மின்சாரமற்ற நாடுகள் எமது வலயத்தில் இல்லை. மாற்று மின்சார உற்பத்தி நிலையங்களை உருவாக்க நடவடிக்கையெடுக்கப்படும். இப்பகுதியில் காற்றாலை மின்சாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருளினை ஒளியின் மூலம் அகற்றினால் போதாது. மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த அதனை பயன்படுத்த வேண்டும். எமது வளத்தை வெளிநாடுகளும் நுகரும் நிலையினை தோற்றுவிக்க வேண்டும். நகரங்களை இணைக்கும் ஒன்றாக மின்சாரம் பயன்படும். மின்சாரம் வேண்டும் என்ற ஆர்ப்பாட்டங்களுக்கு இடமில்லை. அன்று யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வரும் போது அதற்கு எதிராக செயற்பட்டவர்கள் இன்று அபிவிருத்திக்கு எதிராக செயற்படுவது வேதனையாக இருக்கின்றது.

ஜீ.எஸ்.பி.கிடைக்கக்கூடாது என்று சர்வதேசத்திற்கு சென்று பேசியவர்கள் இலங்கைக்கு முதலீட்டாளர்கள் வரும் போது அவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை செய்வார்கள். நாட்டுக்கு துரோகம் இழைப்பவர்களாக இருக்கும் வரைக்கும் மக்கள் அவர்களை புறக்கணிப்பார்கள். அதனைத் தான் அவர்கள் தற்போதைய தேர்தல்களில் செய்துள்ளனர்.

நாம் உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்துவோம். மக்கள் எமக்கு தொடர்ந்து ஆணை தருகின்றனர்.நாம் இப்போது செய்ய வேண்டியது எமது நாட்டை ஒளிமயமானதாக மாற்றுவது தான்.1971 ஆம் ஆண்டு, 1980ஆம் ஆண்டுகளிலும் மற்றும் பயங்கரவாதிகளின் செயற்பாடுகளாலும் அரசியல் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக இழந்தவை ஏராளம். அதன் மூலம் நாம் பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளோம். அதனை தற்போது மாற்றியுள்ளோம்.

அதிவேக பாதைகள், துறைமுகங்கள், இதரமான சர்வதேச விளையாட்டு மைதானம் என்பன இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன.இதுதான் எமது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு. எமது நாட்டை நாளை ஒளிமயமாக்கும் திட்டங்களுக்கு ஆதரவு அளிப்பது தான் காலத்தின் தேவையாகும்.

எமது நாட்டில் இல்லாமல் ஆக்கப்பட்ட பல விடயங்களை மீண்டும் எமது காலத்தில் குவித்திருக்கின்றோம்.

அதேபோல் எமது நாட்டையும் மக்களையும் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கான புதிய தேசத்தை உருவாக்குகின்ற பொறுப்பை நாம் சுமந்துள்ளோம். அதனை உணர்ந்து பொறுப்புடன் நாம் செயற்படுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பிரதித் தலைவர் பதவிகள் குறித்து ஐ.தே.கட்சி ஆராய்வு

## ஐ.தே.க. பொதுச்செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற் குழு கூட்டத்தின் தொடர்ச்சி நேற்று மாலை இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் உறுதியான முடிவுகள் எடுக்கப்படாத நிலையில் கலந்துரையாடல்கள் நேற்றுவரை ஒத்தி வைக்கப்பட்டன.

இதனிடையே நேற்று முன்தினம் மத்திய குழு செயற்கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது உரையாற்றிய கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கட்சிக்கான பதவிகள் தொடர்பில் மத்திய செயற்குழுவிடம் வாய்மூல அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் கட்சியினுள் இரண்டு பிரதித் தலைவர் நியமனங்கள் குறித்து பிரேரிக்கப்பட்டதாகவும் ஏனைய பதவிகள் குறித்து பின்னர் ஆராய்ந்து தீர்மானிக்கவுள்ளமை குறித்தும் கருத்து வெளியிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவுடனும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் எனினும், இறுதித் தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச, கட்சித் தலைவர் பதவியை விடுத்து பிரதித் தலைவர் பதவியை எதிர்பார்த்திருப்பதாகக் கட்சியின் உள்ளகத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைக் கருத்திற்கொண்டே இரண்டு பிரதித் தலைவர் பதவிகளை வழங்குவது குறித்து நேற்று மாலை இடம்பெற்ற மத்திய செயற்குழு அமர்வில் ஆராயப்பட்டுள்ளதாக பொதுச்செயலாளர் குறிப்பிட்டார். (2-4)

# புலிகள் அமைப்பிற்கு நிதி சேகரித்தவர்களுக்கு ஜேர்மனியில் வழக்கு விசாரணை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஜேர்மனியில் நிதி சேகரித்தமை தொடர்பில் கைதான ஜேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த 4 பேர் தொடர்பான வழக்கு விசாரணை அந்நாட்டு உயர்நீதிமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்க ஜேர்மன் பொறுப்பாளரும் ஜேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளருமான வாகீசன் என அழைக்கப்படும் வி.எஸ்.விஜயகனேந்திரா (வயது 35), ஜேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்தவர்களான எம். சசிதரன் (வயது 34), ரி.கணேஸ்வரன் (வயது 40) மற்றும் டபிள்யூ.அகிலன் (வயது 35) ஆகியோரே கடந்த வருடம் மார்ச் 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஜேர்மனியில் நிதி சேகரித்தமை, பொதுமக்களிடம் கட்டாயப்படுத்தி நிதி வசூலித்தமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மீதான வழக்கு நேற்று முன்தினம் ஜேர்மனி டுசில்டோவ் நகரிலுள்ள உயர் நீதிமன்றத்தில் 5 நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரசதரப்பு வழங்கறிஞர்களால் நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டது. கட்டாயப்படுத்தி யாரிடமும் நிதி சேகரிக்கவில்லை என சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர்.

இந்த வழக்கின் விசாரணைகள் தொடர்ந்து பல பிரிவுகளாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# நாடு முழுவதிலும் போலி வைத்தியர்களை கண்டுபிடிக்க விசேட நடவடிக்கை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

நாடு முழுவதும் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள் இருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாறானவர்களுக்கு எதிராகச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவதற்கும் கண்டுபிடிப்பதற்குமான விசேட நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் நாயகம் வைத்தியர் அஜித் மெண்டிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மருத்துவக் கலவையாளர்களும் மற்றும் வைத்தியர்களிடம் தொழில் புரிந்தவர்களுமே இவ்வாறு போலி வைத்தியர்களாகச் செயற்பட்டு சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர்.

நாடு முழுவதும் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு தமது போலிச் சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர். இவ்வாறானவர்களிடம் சிகிச்சை பெறுவதால் நோயாளர்கள் பல்வேறுபட்ட உபாதைகளுக்குள்ளாகின்றனர்.

அவ்வாறானவர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. போலி வைத்தியர்களைக் கண்டுபிடிக்க விசேட பிரிவு அமைக்கப்பட்டுள்ளதோடு பிரதேச சுகாதார இயக்குநர்கள் மற்றும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஊடாகச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் அஜித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (2-4)

# வடக்கு மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து ஆராய்வு



## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

வடக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஜனநாயகமான முறையில் நடைபெற்றுள்ளதையடுத்து வடக்கு மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து ஆராய்வோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

வடக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஜனநாயகமாக நடைபெற்றுள்ளது. அந்த வகையில் விரைவில் வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்துவது குறித்து ஆராயவுள்ளோம்.

கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டதும் முதலில் அங்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. பின்னர் கிழக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டது. அதேபோன்று வடக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முழுமையாக நடைபெற்றதும் வடக்கு மாகாண சபை தேர்தலுக்குச் செல்வோம் என்றார். (2-4)

# ஜனரஞ்சக தீர்மானங்களால் நாட்டை மேம்படுத்த முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

ஜனரஞ்சக தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டை பின்னோக்கிக் கொண்டு செல்லாது கடினமான தீர்மானங்களையேனும் எடுத்து நாட்டை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் முதுலாவது கட்டத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் முதலாவது அனல் மின் நிலையமான புத்தளம் -நுரைச்சோலை முதலாம்கட்ட அனல் மின்நிலையத்திலிருந்து 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் விநியோகத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளும் நாட்டின் அனைத்து பாகங்களுக்கும் மின்சாரத்தை விநியோகிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தன என நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மின்சாரத்தை முழுமையாக பெற்றுக்கொடுப்பதன் ஊடாக நாடு மாத்திரமன்றி பிரஜைகளும் முழுமையடையவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று முன்னர் இருந்த அரசாங்கங்கள் ஏனையோரின் அழுத்தங்களை கருத்தில் கொண்டு ஆட்சியை தங்கவைத்துக் கொள்ளும் நோக்கில் அனல் மின்நிலைய நடவடிக்கையை பிற்போட்டு வந்ததாகவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டுள்ளார். (4-2)

# புதிய உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு செயற்றிட்டம் கற்பிக்கப்படும்

(கொழும்பு)

புதிதாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விழிப்புணர்வு செயற் றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்ற சட்ட நடவடிக்கைகள் மற்றும் செயற் பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் கற்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். குறித்த செயற்றிட்டம் மாவட்ட அடிப்படையில் நடைபெற வுள்ளதாக மேலும் குறிப்பிட்டார்.

கடந்த மார்ச் 17 ஆம் திகதி இடம் பெற்ற 234 உள்ளூராட்சி மன்றங் களுக்கான தேர்தலில் பல புது முகங்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## சின்னம் சூட்டும் வைபவம்

மு/அளம்பில் றோ.க.வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் நேவிற் ஜீவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட ஆணையாளர் ஜேம்ஸ் சபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)





யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



72



கவிப்பேரரசு வைரமுத்து

அடிச்சுப்பாத்தாரு- குத்திப்பாத்தாரு - நொக்கிப்பாத்தாரு- தட்டிப்பாத்தாரு- தடவிப்பாத்தாரு- தோள்ல நேக்கால முட்டித் தூக்கியும் பாத்தாரு.மாடு எந்திரிக்கல. இதுக்குமேல சக்தி இல்லசாமி; செய்யிறத செஞ்சுக்கன்னு கெடக்கு சத்துக் கெட்ட சவத்தமாடு.

சிமிழக் கோதிக்கொடுத்தாரு; வாலை உருவி விட்டாரு; வகுத்தடியில் கையைக் கோத்து வருடியும் பாத்தாரு. மாடு 'இஸ்ஸு புஸ்ஸு' மூச்சு விடுதே தவிர எந்திருக்கிற பாட்டக் காணோம்.

கள்ளிப்பட்டிக்குள்ள ஒவ்வொரு வீடா நொழஞ்சு ஆளில்லாத வீடுகள்ல ஆளிருக்கான்னு தேடிப்பாத்த தண்ணி, அங்க ஒரு ஈகாக்கா கூட இல்லேன்னு தெரிஞ்சதும் மனுசவாடை தேடி மோப்பநாய் ஓடிவர்ற மாதிரி கன்னிமார் கோயில் ஓடை தேடிக் கடகடன்னு ஓடிவருது.

"தரையிலயே நடக்கமாட்டாமக் கெடக்கு எம்மாடு; தண்ணியில வேற மாட்டிக்கிட்டா கடவுளே வந்து வண்டியத் தள்ளினாலும் கரையேற முடியாதே!"

தாரைதாரையா ஒழுகிற கண்ணீரோட மாட்டு மூக்கணாங்கயிறப் புடிச்சு, அது மூஞ்சியில மூஞ்சிவச்சு, ஒடம்பு குலுங்கக் குலுங்கப் பேயத்தேவர் அழுததப் பாத்ததும் என்ன நெனச்சோ ஏது நெனச்சோ மாடு கொம்ப ஒரு பக்கமாச் சாச்சு, தலைய அங்கிட்டும் இங்கிட்டுமா ஒரு ஆட்டு ஆட்டிட்டு, பொசுக்கின்னு எந்திரிச்சு நின்னிச்சு.

மண்ணுக்கொரு கும்புடு மாட்டுக்கொரு கும்பிடுன்னு ரெண்டு கும்பிடு போட்டுட்டு வண்டியில தவ்வி ஒக்காந்து "ஹே ஹே ஹே"ன்னு ஓட்ட ஆரம்பிச்சா, எந்திரிச்சு நின்ன மாடு எட்டுவைக்க மாட்டேங்குது. புரிஞ்சுபோச்சு பேயத்தேவருக்கு. இழுக்கணும்ன்னு எண்ணமிருக்குது மாட்டுக்கு; பாரம்தான் பெரிசாயிருக்கு.

"ஏலே! மொக்க! எது வண்டியில பெரும்பாரமோ அத எடுத்து எறிடா".

"தாத்தா! நீ உசிரக் குடுத்து உருட்டிக் கொண்டாந்த ஆட்டு ஒரல்தான் பெரும் பாரம் தாத்தா".

கொஞ்சம் கூட யோசிக்காம ரெண்டு பேருமாச்சேந்து ஆட்டு ஒரலை தடார்ன்னு தள்ளிவிட்டாக. அது உருண்டோடிப் போயி ஓடைப் பள்ளத்துல விழுந்துச்சு.

மாடு மேடுகடக்க, தண்ணி வந்து விழுந்து ஓடைய முழுங்கிருச்சு ஒரே முழுக்கா.

நாலாம் நடைக்கு வண்டிகெளம்ப முருகாயி வந்து முன்னவிழுந்தா.

"சாமி.. கால்ல விழுந்து கெஞ்சுறேன் சாமி. ஏழேழு தலைமுறைக்கும் நீங்க பொழைச்ச பொழைப்பைச் சொல்ல மகராசன் கொண்டாந்த இந்த மரச்சாமான் போதும் சாமி. இன்னொரு நடைபோக வேணாஞ்சாமி. எல்லா ஊரையும் முழுங்கி ஏறிக்கிட்டேயிருக்கு தண்ணி, மாட்ட முழமுழுங்கின மலைப்பும்புக்கு ஆட்ட முழுங்கத் தெரியாதா? போதுஞ்சாமி! போகாதீக சாமி!"

பேயத்தேவர் கால்ல விழுந்து அவர் பாதத்த தெடடும் தொடாமப் புலம்பி விக்கிவிக்கி அழுது தடுக்கிறா முருகாயி. முன்பக்கம் நனஞ்சு போனதுனால முந்தானச் சீலையை பொரட்டி மூக்குத் தொடக்கிறா மின்னலு.

"அழுதுநிக்கிறிகளே பொம்பளைகளா! நான் என்ன அவத்தப்பயலா? எனக்கென்ன நீச்சுத்தெரியாதா? நீக்குப்போக்குத் தெரியாதா? ஒரே ஒரு மரத்தூணு அங்க பாக்கியிருக்கு. எங்க பாட்டன் முப்பாட்டன் காலத்துலயிருந்து விட்டத் தாங்கிப் புடிச்ச பெருந்தூணு. பட்டாசாலையில நீங்கள்லாம் சாவகாசமாச் சாஞ்சுக்கிட்டுப் பேன் பாப்பீகளே!.. அந்தப் பெருந்தூணு அதமட்டும் கரசேத்துட்டா என் பரம்பரையையே கரைசேத்த மாதிரி. வழிவிடுங்க பொம்பளைகளா... வாரேன்".

கன்னிமார்கோயில் ஓடை வடக்குமேட்டுல வண்டி நிக்கவும் அவர் கண்ட காட்சி இருக்கே! அவரையும் அறியாம 'ஆத்தே'ன்னு கத்தினாரு.

முக்காவாசி ஊரு முங்கிப்போச்சு. ஏகத்துக்கு எந்திரிச்சு நிக்குது தண்ணி. அங்கிட்டுப்பாத்து இங்கிட்டுத் திரும்புறதுக்குள்ள அரையடி ஏறி நிக்குது தண்ணி. பொந்துக்குள்ளயும் புதருக்குள்ளயும் கெடந்த பாம்புகளும் தேளுகளும் நட்டுவாக்காலிகளும் எலிகளும் பெருச்சாளிகளும் படை படையாக் கூட்டங்கூட்டமாத் தவ்வியும் மிதந்தும் தாவியும் ஓடுதுக. முங்காத காலிமரத்துக் கிளைகள்ல ஆலமரத்து விழுதுகள் மாதிரி சரஞ்சரமாத் தொங்குதுக சாரப்பாம்புக. வெறகுகளும் கட்டைகளும் சோளத்தட்டைகளும் இத்த சாக்குகளும் டயர்களும் டப்பாக்களும் முங்கியும் முங்காமலும் மெதந்து மெதந்து வருகுதுக.

இப்பவோ பெறகோன்னு முங்கப்போற முத்தாலம்மன் கோயில் கோபுரத்துமேல நாலஞ்சு நல்லபாம்புகளும் கட்டுவிரியன்களும் 'நமக்குள்ள இப்ப சண்டை சத்தம் வேணாம்; பொழைக்கிற வழியப்பாப்போம்ன்னு' நாலு தெசைகள்லயும் தலையத்தூக்கித் தூக்கிப் பாக்குதுக்.


கன்னிமார் கோயில் ஓடை மேட்டுக்குமேல வண்டி போகாதுன்னு தெரிஞ்சுக்கிட்டு, "மொக்க! நீவண்டியப் பாத்துக்கடா"ன்னு சொல்லிட்டுக் கடப்பாரைய மட்டும் கையில் புடிச்சுத் தண்ணியில எறங்கினாரு பேயத்தேவரு. கெண்டைக்கால் தண்ணி- முழங்கால்தண்ணி - இடுப்புத்தண்ணி- கழுத்த்தண்ணி கடந்து போனவரு கடக்குன்னு முங்கிட்டாரு. அது ஓடப்பள்ளம்; மறுபடி மேடேறி வாராரு. கழுத்துத் தண்ணி அளவுலேயே போயிக்கிட்டிருக்கிறப்ப கையை யாரோ புடிக்கிற மாதிரி இருந்திச்சு. தண்ணிக்குமேல கையைத் தூக்கிப்பாத்தா, யாரோ கெட்டியாக் கட்டுப் போட்ட மாதிரி கையில சுத்தியிருந்திச்சு ஒரு தண்ணிப்பாம்பு.ஒதறிப்பாத்தாரு; போகல. ஓங்கித்தண்ணியில அடிச்சுப்பாத்தாரு; விடல. பாம்புத்தலைய ஒரு கையில இறுக்கிப் புடிச்சுக்கிட்டு, வாலைப்பல்லுல கடிச்சு இழுத்தாரு ஒரு இழு; வந்திருச்சு. தலைக்குமேல நாலு சுத்துச்சத்தி விர்ருன்னு வீசி எறிஞ்சாரு.

அந்தா..அந்தா.. அங்கதான் இருக்கு அவரு வீடு. ஒரு முங்கு நீச்சல் போட்டு விசுக்குன்னு போறப்ப என்னமோ ஒன்னு நெஞ்சுல முட்டுது; கையில 'கழுக்' 'மொழுக்'ன்னு என்னமோ சிக்குது பயந்து போயிக் கடக்குன்னு கண்ணத் தொறந்து மேல வந்து பாத்தா தண்ணிகுடிச்சு ஊறிப்போயி ஊதிப்போன ஒரு கெழவி பொணம் அவரைக் கடந்து போயிட்டு வாரேன்னு போயிக்கிட்டிருக்கு. யாத்தேன்னு பயந்து போயி கடப்பரையில ஒரு தட்டுத்தட்டி தள்ளி விட்டுட்டு வந்து சேந்தாரையா வாழ்ந்த வீட்டுக்கு. வாழ்ந்த நாளெல்லாம் வாசல்வழியா நடந்து" போன வீட்டுக்குள்ள நீந்திப்போறாரு. இந்தா இந்தான்னு நீந்தி வந்து தூணத்தொட்டுட்டாரு. தூண ஒரு கையில புடிச்சுக்கிட்டு தரையைக் குத்துறாரு; குடையறாரு பேக்குறாரு. கடப்பாரையைத் தலைகீழா புடிச்சுக்கிட்டுத் தாழ்வாரத்து ஓட்டுக்கூரையை நாலு தட்டுத் தட்டுறாரு. தண்ணி ஏற ஏற உடம்புல சக்திகுறையுது; தளந்து போனாரு. மேலையும் கீழயும் போடுபோடுன்னு போட்டுப் பேத்துப் புட்டு தண்ணியிலயே கொஞ்சதூரம் பின்னுக்க நீந்திப்போயி வேகமா வந்து கடப்பாரையில ஒரு குத்தும் குத்தி, கால்ல ஒரு எத்தும் எத்தித் தள்ளினவுடனே தடார்ன்னு தண்ணியில சாஞ்சிருச்சு தூணு. ஆசையா நீந்திவந்து தண்ணியில மெதந்த மரத்தூண அணச்சுக்கிட்டாரு; அவராச்சிரிச்சுக்கிட்டாரு.

"எங்கப்பனே! என்பாட்டனே! என் சிய்யானே"ன்னு தூணக்கட்டிப்புடிச்சுக் கொஞ்சிக்கிட்டாரு. தண்ணிவந்தது ஒரு வகையில நல்லதாப்போச்சு. எடுத்துட்டுப் போறதக் காட்டிலும்,இழுத்துட்டுப் போறது லேசில்லையான்னு அவரா மெச்சிக்கிட்டாரு.

தெருவெல்லாம் தண்ணி...வீடெல்லாம் தண்ணி... இன்னும் ரெண்டு மணி நேரத்துல

(14 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மயிலணி வடக்கு-சுன்னாகம் திருவருள்மிகு மனோன்

# புனராவர்த்தன பிரதிஸ்டா அஷ்

# மஹா கும்பாபிஷேக

## அருளாசிச் செய்தி



சிவநேயச் செல்வர்கள்.

சுன்னாகம் மயிலணி வடக்கில் எழுந்தளியிருந்து அருளாட்சி புரியும் மனோன்மணி அம்பிகா சமேத அன்ன மகேஸ்வரருக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது.

எல்லாவற்றையும் செயற்படுத்துகின்ற இறைவன் *வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு* வடிவங்களை எடுத்து ஆலயங்களில் வீற்றிருக்கின்றான். ஒரு நாமம், ஒரு உருவம் இல்லாதவனுக்கு ஓர் உருவம் கொடுத்து இறைவனை வழிபடும் சமயம் நம் சமயம். ஆலய வழிவாடு மனிதனை மனித நேயத்தோடு வாழ்ந்து இறை இன்பத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளும் பூசைகளும் மன ஒருமைப்பாட்டையும் ஆன்ம விடுதலையையும் ஏற்படுத்தும். இதனாலேயே நம் சமயத்தவர் வாழும் இடமெல்லாம் ஆலயம் அமைத்து வழிபாடாற்றும் மரபைக் கொண்டுள்ளன. இந்நிலையில் சுன்னாகப் பிரதேசம் பல ஆலயங்களையும் கற்று உணர்ந்தவர்களையும் உணர்ந்தபடி வாழ்கின்றவர்களையும் கொண்ட இப்பிரதேசத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னமகேஸ்வரருக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் கும்பாபிஷேகம் இங்கு இன்று நடைபெறுவது ஊருக்கும் ஆலயத்திற்கும் மக்களுக்கும் குதூகலத்தை ஏற்படுத்துவதாகும். இப் புண்ணியகாரியத்தை ஆற்றும் ஆலய பரிபாலனசபை குருமார்களுக்கும் மக்களுக்கும் இறையாசி கிடைப்பதாக.

எல்லோரும் வழிபாடாற்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## பிரதிஸ்டா பிரதம குருவின் ஆசிச்செய்தி




இறைவன் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் பாலில் நெய் போன்று உள்ளான். ஆனால் ஆலயங்களில் தயிரில் நெய் போன்று உள்ளான். தயிரைக் கடையும் போது நெய் பெறப்படுவது போல ஆலய வழிபாட்டின் மூலம் இறையருளைப் பெறுவது மிக இலகுவானது.

இதனையே *திருக்கோயில் இல்லாத திருவூரிலும்* என நாவுக்கரசரும் *கோயில் லாத ஊரில் என குடியிருக்க வேண்டாம்* என ஔவையாரும் கூறியுள்ளனர்.

திருமூலரால் போற்றப்பட்ட சிவபூமி எனும் இலங்காபுரித் திருநாட்டின் வடபால் சுன்னாகம் மயிலணி வடக்கு எனும் பகுதியிலே சிவஸ்தல வரிசையில் அன்னமகேஸ்வரர் என்ற நாமத்தோடு வீற்றிருந்து அருள்பாலிக்கும் எம் பெருமானுக்கு குடமுழுக்குப் பெரும் சாந்தி விழா கைகூடியுள்ளது.

இக் கும்பாபிஷேகத்தின் மூலம் திருப்பணிகளை ஏற்றுச் செய்தவர்களுக்கும் மற்றும் கும்பாபிஷேகத்தை நடாத்தியவர்களுக்கும் கிராமத்து மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க அன்னமகேஸ்வரப் பெருமானை வேண்டிப் பிரார்த்திப்போமாக!

சந்வே ஜனக சுஜினோ பவந்து
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஆலய குரு ஆகோர சிவாச்சாரியார்
பிரதிஸ்டா தத்வநிதி
சிவஸ்ரீ செந்தில்நாதசுகுமாரக் குருக்கள்



## ஆலய வ

*கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்* என்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கமைவாக ஒவ்வோர் ஊர் மத்தியிலும் ஒன்றோ, இரண்டோ கோயில்கள் அமைந்திருப்பது கண்கூடு. இதற்கமைவாக நல்ல குடிமக்கள் வாழ்கின்ற ஆலயம்தான் அன்னமார் ஆலயம். இத்தோடு காளிகோயில் என்று அழைக்கப்படும் ஒரு சிறு கோயிலுமுண்டு. அன்னமார் கிராமியக் கடவுளாவார். கிராமியத் தெய்வங்களாக நம்மவர் வழிபடும் மாரியம்மன், காளியம்மன், பெரிய தம்பிரான், ஐயனார், அன்னமார் போன்ற தெய்வங்களின் வழிபாடு சிவ வழிபாட்டோடு பின்னிப் பிணைந்துள்ளன. இந்தக் கிராமியத் தெய்வங்கள் யாவும் ஏழு ஆலயங்களைக் கொண்ட ஏழாலை என்று அழைக்கப்படும் கிராமத்தில் ஆங்காங்கே அமைந்துள்ளன. இந்த ஆலயங்கள் அமைந்த வரலாறுகள் மிகவும் ஆச்சரியப்படக் கூடியவையும் அற்புதமானவையுமாகும்.

பறை மேளங்கள் முழங்க, மடை பரவிப் பொங்கல் பொங்கி அன்றைய தினம் பக்தி மேலீட்டினால் சிலர் உருவாடுவார்கள். இவர்கள் படிமத்தான்கள் என்றழைக்கப்படுவர். இவ்வாறு ஏழாலையைச் சேர்ந்த ஒரு படிமத்தான் எறிந்த எலுமிச்சம் பழங்கள் விழுந்த இடங்களில் இந்த ஆலயங்கள் தோன்றியது பது பரம்பரைக் கதைகளாகும். இந்த எலுமிச்சம்பழங்களில் ஒன்று மயிலணி வடமேற்கிலுள்ள காணிக்குள் கிடந்தது. அந்த இடத்திலே இற்றைக்கு நூற்றியேழு வருடங்களுக்கு முன்னர் மக்கள் ஒரு கொட்டில் அமைத்து மூன்று சூலங்களை நாட்டி அன்னமார் என்ற தங்களுக்குரிய குல்தெய்வத்தை வழிபடத் தொடங்கினார்கள். அந்த இடத்தில் வருடத்திற்கொரு முறை பந்தல் போட்டு பொங்கி, மடை பரவி வழிபட்டார்கள். இந்த இடத்தில் கோயில் அமைந்துவிடும் என்ற பீதியில் குறிப்பிட்ட வளவுக்காரர் இந்த இடத்தில் அவ்வாறு வழிபடுவதைத் தடுத்துவிட்டார்கள். இதனால் ஒரு படிமத்தான் தோன்றி அந்த இடத்திலிருந்து ஓர் எலுமிச்சம் பழத்தை வீசிய போது, அது தற்போது கோயில் அமைந்துள்ள இடத்தில் சுழன்றுகொண்டிருப்பதைக் கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டு அந்த இடத்திலே கோயில் அமைத்து வழிபடத் தொடங்கினார்கள். 1912ஆம் ஆண்டு ஓர் ஓலைக் கொட்டிலாக இருந்தது. அதன்பின்னர் மண்ணினாலும் செங்கட்டிகளினாலும் சுண்ணாம்புக் கற்களினாலும் கிழக்கு வாசல் வீடு போன்ற ஒரு கோயில் அமைத்து வழிபட்டார்கள்.

இந்த வழிபாட்டு முறைகள் மிகவும் எளிமையாகவே இருந்தன. இதனால் ஊர்மக்கள் வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் விளக்கேற்றி வழிபாடு செய்தார்கள். நாள் போக ஊரில் கொடிய நோய்கள் ஏற்பட அதனால் பீதி கொண்ட மக்கள் குளிர்த்தி வைக்கவேண்டும் என்று வருடந்தோறும் குறிப்பிட்ட ஒருநாளில் குளிர்த்தி செய்துவந்தார்கள். அதன் பின்னர் பொங்கல்

## தலைவரின் வாழ்த்துச் செய்தி



சுன்னாகம் மயிலணி வடக்கில் கோயில் கொண்டு அருள் பாலிக்கின்ற மனோன்மணி அம்பிகா சமேத அன்னமகேஸ்வரர் தேவஸ்தானம் இன்று மகாகும்பாபிஷேகம் எனும் பெரு விழாக்கண்டு நிற்கின்றது.

ஆரம்ப காலத்தில் சிறிய ஆலயமாகக் காணப்பட்ட இவ் ஆலயம் எம்பெருமானின் திருவருளால் அடியவர்களின் பெருமுயற்சியின் பயனாக இன்று பெருவளர்ச்சியடைந்து மகா கும்பாபிஷேகம் கண்டு நிற்கும் இத்தருணத்தில் அடியார்கள் அனைவரும் அன்னமகேஸ்வரர் அருள்பெற பரிபாலன சபைத் தலைவர் என்றவகையில் பிரார்த்திக்கிறேன். இவ் ஆலய அடியவர்கள் மென் மேலும் தொண்டுகள் பல புரிந்து சிறப்புடன் வாழ மனோன்மணி அம்பிகா சமேத அன்னமகேஸ்வரர் அருளாட்சி கிட்டுவதாக.

தலைவர் ப.இரவிச்சந்திரன், ஆலய பரிபாலனசபை.

முகிரி பந்தல் அன்
கொங்கிறீட் கலவை
இயந்திர சேவை
மம்மி சிற்றி, மயிலணி
சுன்னாகம்.
0777 606742
077 84 48020

பிரவீன் கட்டிட நிர்மாணத்துறை
PIRAVEEN CONSTRUCTION
மயிலணி வடக்கு,
சுன்னாகம்
PRoP: K.RAJITH
077 4048845

கந்தையா
ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்: நகுலேஸ்வரன்
புகையிரத நிலைய வீதி,
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

பரணிகா
மல்ரி சென்ரர்
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.
பாடசாலை உபகரணங்கள்,
அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
விற்பனையகம்.

மாருதி
பந்தல் சேவை
கே.கே.எஸ். வீதி, சுன்னா
அலங்காரப் பந்தல்கள், பூமணவறை
தலைநகை சோடனை, அனைத்து
சேவைகளும் எம்மிடம்
உரிமையாளர்: சு.சுஜீத்
தொ.பே: 0777 8850

அனுரா வீடியோ சென்ரர்
ANURA
Internet Cafe & Video
மதவடி சந்தி, கே.கே.எஸ்.
வீதி, சுன்னாகம்.

தயா
மரக்காலை
இல.89, காங்கேசன்துறை
வீதி, சுன்னாகம்.
குறைந்த விலையில் வீட்டுத்தளபாடம்,
தீராந்தி, பலகை, வீட்டு உபகரணங்கள்
(யன்னல், கதவு) போன்றவற்றிற்கு

மாதங்கி பாமஸி
& குறோசறி
சகல விதமான மருந்துகளுக்கும்
நாடவேண்டிய இடம்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்

முத்து
பிறிண்டேர்ஸ்
38/1, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
077 8038629

சரோஜ்
மோட்டோர்
கே.கே.எஸ். வீதி, சுன்னா
மோட்டார் சைக்கிள் திரு
வேலைகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ணி அம்பிகா சமேத அன்னமகேஸ்வரர் தேவஸ்தானம்

# ...பந்தன உத்தம நவகுண்ட பக்ஷ

# ... விஞ்ஞாபனம்-2011





## ...ரலாறு

...வைக்க வேண்டும் என்று கருதி வருடத்தில் ...வேறுஒரு நாளில் பொங்கல் பொங்கி மடை பரவி வழிபட்டு வந்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பொங்கல் பொங்கி மடை போடுவதும் ...ளிர்த்தி வைப்பதும் வழக்கமாகி வந்தது.

காலப்போக்கில் பொங்கல் நாளில் ஆடு, கோழிகளைப் பலியிட்டு வழிபட்டு வந்தார்கள். இது ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதத்தில் ...முதல் வெள்ளியில் விளக்கு வைத்து அடுத்த வெள்ளி இரவு பொங்கல் பொங்க ஆயத்தமாகி வீடு வீடாக மடை கிளப்பி ஆடுகளை அழைத்து ...சனிக்கிழமை விடியப் பொங்கல் பொங்கிப் பெரு ...மடைகள் வைக்கப்பட்டு ஆடு, கோழிகளைப் ...பலியிட்டு வந்தார்கள். அடுத்த வெள்ளி எட்டாம் ...மடையும் வைத்து வழிபடத் தொடங்கினார்கள்.

மக்களுக்கிடையே சில எதிர்ப்புக்கள் ஏற்பட் ...டாலும் காலப்போக்கில் அன்னமாரை அன்னம ...கேஸ்வரர் என்று பெயர் சூட்டி ஓர் உருநாடு செய் ...வித்து சூலங்களை எடுத்துவிட்டு உருநாட்டை ...நிறுவிப் பூசை செய்யத் தொடங்கினார்கள். இந்த நேரத்தில் சித்திரைப் பௌர்ணமியில் தீர்த்தம் ...வரக்கூடியதாக அலங்காரத் திருவிழாவும் ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாக ஆலயம் வளரத் ...ங்கியது. இந்த நேரத்தில் பல அற்புதங்களும் நடைபெற்று வந்தன. ஒரு வழிப்போக் ...கர் நீண்ட நாட்களாக பிள்ளையில்லாமையால் அன்னமகேஸ்வரரை வழிபட்டு பிள்ளை ...கிடைக்கப்பெற்று வெளி மண்டபத்துக் ஓடுகள் அன்பளிப்புச் செய்துள்ளார். இவ்வாறு ஆல ...யம் வளரத் தொடங்க கற்கோயில் கட்ட வேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே தோன்றிய ...போது பொதுமக்களின் உதவியோடு வைரக் கற்களினால் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா ...ண்டபம் போன்றன கட்டப்பட்டு மகா கும்பாபிஷேகமும் நடைபெற்று பெரும் ஆலய ...மாக மிளிரத் தொடங்கியது. இதன்பின்னர் பரிவாரத் தெய்வங்களும் நிறுவி அழகிய வசந்த ...மண்டபமும் கட்டப்பட்டு சிறப்பான ஆலயமாக உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆலயம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. காலத்துக்காலம் நிர்வா ...கங்கள் மாற்றப்பட்டு ஆலயம் புத்தொளிர்விட்டுப் பிரகாசிக்கின்றது. அன்னமகேஸ்வரருடன் ...மனோன்மணியும் உடன் உறைகின்றாள். இதனால் சித்திரைப் பௌர்ணமியைத் தீர்த்த ...மாகக் கொண்டு சிவன் வாசல் அலங்காரத் திருவிழாவும், ஆடிப்பூரத்தை பௌர்ணமியாகக் ...கொண்டு அம்மன் வாசல் அலங்காரத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றன. இன்னும் ஆலயத்துக்கு வெளி வீதி எடுத்து தேர் ஓட்டத் திட்டமிட்டுள்ளார்கள். மனோன்மணி சமேத அன்னமகேஸ் வரர் துணைகொண்டுதிட்டங்கள்யாவும்நடைபெறும். இந்நிலையில்அடியார்களின் ...துணையோடு எமது ஆலயம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் கும்பாபிஷேகம் ...காண்கிறது .

ஆலய திருப்பணிச் சபை.

## ஆசிச்செய்தி



நாம் தினசரி உண்ணுகின்ற சாதத்தைப் பற்றி சிறிது நினைத்துப் பார்ப்போம். அது உண்ணப் பக்குவமாகின்ற சாதமாக வரமுதல் அதைபெறுவதற்கு நாம் என் னென்ன காரியங்களெல்லாம் செய்கின்றோமென சிந்தித்து பார்க்கலாம். முதலில் வயலை உழுகிறோம். மண்ணைப் பண்படுத்தி நெல்லை விதைக்கிறோம். அது வளர்ந்து வரும் சமயத்தில் தேவைக்கேற்ப நீர்பாய்ச்சுகிறோம். களை பிடுங்குகிறோம். பட்சிகள், வெட்டுக்கிளி முதலியன அதை பழுதாக்காமல் அவதானிக்கிறோம். பின் உரிய காலத்தில் அறுவடை செய்து சூடு மிதித்து நெல்லாக்குகிறோம். நெல்லை அவித்து குற்றி அரிசியாக்கிய பின் அதை உலையிலிட்டு உண்ணக் கூடிய பக்குவாகச் சமைக்கிறோம்.

இவ்வாறு முன் காரியங்கள் நாம் உண்ணுகின்ற சாதத்திற்கு செய்வது போல் ஒரு ஆலய மஹாகும்பாபிஷேகத்திலும் திருப்பணிகள் செய்து பல சாந்திகள் செய்து ஆலயத்தைக் கும்பாபிஷேகத்திற்கு தகுதியான ஆலயமாக ஆக்கி யாக குண்டங்கள் அமைத்து ஜபம் எரியோம்புதல் செய்து பிரதான கும்பங்களில் தெய்வீக சக்தியை எழுந்தருளச் செய்து உரிய கால நேரத்தில் அபிஷேகம் செய்து தெய்வசான்னித்தியத்தை கருவறையில் வீற்றிருக்கும் பிம்பத்தில் எழுந்தருளப்பண்ணி ஜீவ சக்தியை அத்திருவுவத்தில் ஸ்திரப்படுத்துகிறோம். அதன் பின் பக்தர்கள் வழிபட்டு தங்கள் இஷ்டகாம்யார்த்தங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். இத்துணை பெருமை வாய்ந்தது மஹாகும்பாபிஷேகம். இக் கும்பாபிஷேகம் 12 வருடத்திற்கு ஒருமுறை நடைபெற வேண்டுமென்பது விதி.

மயிலணி வடக்கு சுன்னாகம் திருவருள் மிகு மனோன்மணி அம்பிகா சமேத அன்னமகேஸ்வர தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் சிறந்த லக்னத்தில் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது. இக் கும்பாபிஷேகத்தின் பயனாக இவ்வாலய தர்மபாலகர்கள், பக்தர்கள் எல்லோரும் சிறப்புற வாழ இத்தால் ஆசி கூறுகிறேன்.

ஆச்சாரிய குரு சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்
தர்மசாஸ்தா, குருகுல அதிபர், காயத்திரி பீடம்.

## ஆசிச்செய்தி



அரிதிலும் அரிதாகிய மானுட பிறப்பினைத் தந்தாலும் சிறந்த சிவதர்மங்களைச் செய்யும் வாய்ப்பு அனைவருக்கும் கிட்டுவதில்லை. மாயையின் வசப்பட்டு மதி மயக்கமுற்றுள்ள மனிதருக்கு மெய்ப்பொருளான இறைவனின் சிந்தனை, இறை நோக்கம் இலகுவில் எழமாட்டாது. அதனையேதான் ஔவைப் பிராட்டியார் அறம் செய்ய விரும்பு, அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்னும் வாக்கியங்களை முன்பே உபதேசித்துள்ளார். அறப்பணி, சிவப்பணி செய்வதற்கு முற்பிறப்பில் தவம்செய்து இப் பிறவி எடுத்திருத்தல் வேண்டும்.

தர்மங்கள் அனைத்திலும் சிறந்தது ஆலயத்தில் ஆண்டவனைத் துதித்து நாம் செய்யும் சிவதர்மம் என உணரப்படும். சிவதர்மம் பலவற்றிலும் திருப்பணி முற்றுவித்து கும்பாபிஷேகம் செய்வித்தல் முதன்மை பெறுவதனை ஆகமங்களில் அறியலாம். சர்வ சித்துக்களையும் பெரும் சாந்தி அளிப்பதனால் இதனை முயன்று நின்று செய்வித்தும் பேரின்பம் அடைய எத்தணிக்க வேண்டும்.

அதிலும் புதுக்கப்புதுக்க ஆலயம் அமைப்பதிலும் பார்க்க முன்பு எமது மூதாதையர் வழித்தோன்றலிலே கட்டப்பட்ட பரம்பரையாக வந்த ஆலயங்களை அவர்களின் ஆசியுடனும் ஊர்மக்கள், நலன் விரும்பிகள், வெளியிலே வசிப்பவர்கள் உதவியுடன் மயிலணி வடக்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் ஆலயக்குருக்கள் ,பரிபாலன சபையினரின் தனி உபயமாக்கப்பட்ட ஆலயங்கள். இன்று கும்பாபிஷேகம் காணுகின்ற பக்தர்கள் நான்கு மடங்கு பலனை பெறும் பாக்கியம் பெற்றுள்ளனர்.

இக்கைங்கரியம் இன்று பூரணத்துவம் பெறுகின்றது. இக் கும்பாபிஷேக பலன் ஊரவருக்கும் மட்டுமல்ல சைவ உலகிற்கும் கிடைக்கும். பேரலையால் அல்லலுறும் மக்களுக்கும் இந்நேரத்தில் சாந்தி பெற அன்னமகேஸ்வரரின் திருப்பாதங்களை வேண்டி ஆசி கூறுவோமாக.

கலாநிதி சோதிடமாமணி
தியாக கெங்காதரக் குருக்கள், புன்னாலைக் கட்டுவன்.

## பிரார்த்தனை உரை



அகில உலக நாயகனாகிய எம்பெருமான் சுன்னையம் பதி திகழ் மயிலணி வடக்கில் அன்ன மகேஸ்வரர் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்து வரும் வேளையில் அவரது இன்னருள் கூட்டும் கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

பாடசாலை வாயிலில் எழுந்தருளி கலைச் செல்வங்களையும் கல்விச் செல்வங்களையும் சகல சௌபாக்கியங்களையும் அள்ளி வழங்கும் அன்ன மகேஸ்வரரின் அருட்கடாச்சம் என்றென்றும் கிடைப்பதாக!

திரு.சி.சிவகுமாரன், அதிபர்,
யா/கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை.

பிரதீபா
தச்சுத் தொழிலகம்
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
சகல விதமான மரத்தளபாடங்களும்

லிங்கேஸ்
கிறீம் ஹவுஸ்
உற்பத்தி நிலையம்
மயிலணி, சுன்னாகம்.

அலுமினிய வேலைப்பாடுகளுக்கு
தபோதரன்
ஹாட்வெயார்
இல.59, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தில்லையம்பதி மோட்டோர்ஸ்
Dealers in: Agriculture & Electric Watar Pumps, Power Tools, Engineering Tools, Generators, Wood Working Machines & Spare Parts
இல 114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தர்சன்
மர அரிவு ஆலை
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
மரத்தளபாடங்கள், நிலை, யன்னல் கதவு யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

லக்சுமி
ரேட் சென்ரர்
Luxmy Trade Center
இல.31, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
மொத்த, சில்லறை வியாபாரம்

NIRU.COM
Mailani North,
Chunnakam.
Local Netcall, Face to Face, Net Browsing, Game.

ஆர்.கே.பேபி நீட்ஸ்
கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளிற்கும் தேவையான அனைத்து விதமான பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
No. 181 (51), K.K.S. Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம் என்பது என்ன?

எப்போதோ... எப்படியோ...

பொதுவாகவேமக்கள், 'ஆனந்தம்' என்பதை வந்துபோகும் ஓர் உணர்ச்சியாக நினைக்கிறார்கள். உணர்ச்சியென்பது நிலையானது அல்ல; மாறிக்கொண்டே இருக்கும். உணர்ச்சியை நம்மால் உருவாக்கமுடியாது. அப்படி உருவாக்க முயன்றால் அது நடிப்புப்போல் ஆகி, சகிக்கமுடியாத வேதனையாக மாறிவிடும். ஆனால் ஆனந்தத்தை நிலையாக நம்பாமல் அனுபவிக்கமுடியும்.

உடல், மனம், உணர்ச்சி இவைகளை ஒரு சீரான நிலைக்குக் கொண்டு வந்தால், உயிரின் இயல்பான ஆனந்தத்தைநாம் அனுபவிக்கலாம். இப்போது உங்களுக்கு ஆனந்தத்தை நிலையாக அனுபவிக்க முடியாத காரணம் புரிகிறதா? எப்போதோ, எப்படியோ சில கணங்கள் ஆனந்தமாக இருக்கிறோம். அப்புறம் மீண்டும் ஆனந்தமற்ற நிலைதான்.

ஒருசின்னக் கதையை இதற்கு பொருத்தமான உதாரணமாகச் சொல்லலாம். வயல் வெளியில் ஒரு காளை மாடு மேய்ந்து கொண்டிருந்தது. அதன் முதுகில் ஒரு குருவி அமர்ந்து, காளை மாட்டின் உடலில் இருந்த சிறு பூச்சிகளைத் தின்று கொண்டிருந்தது. இருவரும் தத்தம் செயல்களில் சுவாரஸ்யமாக ஈடுபட்டு இருந்தார்கள். தூரத்தில் உள்ள ஒரு பெரியமரத்தை குருவி ஏக்கமாகப் பாத்துக் கொண்டே, "முன்பெல்லாம் அந்த மரத்தின் உச்சிக்கிளைக்குக்கூட என்னால் பறந்து செல்ல முடியும். ஆனால் இப்போது என்னிடம் வலிமை இல்லை அதன் கிளைகளுக்குக் கூட பறந்து செல்ல முடியவில்லை" என்று காளையிடம் வருத்தமாகச் சொன்னது.

உடனே காளைமாடு, "இதற்குப் போயா கவலைப்படுகிறாய்? என்னுடைய சாணத்தைக் கொஞ்சம் சாப்பிட்டால் போதும்... இரண்டு வாரங்களுக்குள் நீ உச்சிக்கே பறக்கலாம்!" என்றது. குருவி நம்பவில்லை . "பைத்தியக்காரத்தனமாகப் பேசாதே! இதெல்லாம் சாத்தியமா... என்ன?" என்று கேட்டது. அதற்குக் காளைமாடு "மனித இனமே என் சாணத்தை நம்பித்தான் உள்ளது. சாப்பிட்டுப்பார். உண்மை புரியும்!" என்று வேடிக்கையாகச் சொன்னது.

குருவிக்கு சந்தேகம் எழுந்தாலும் ஆசை விடவில்லை. சாணத்தைச் சாப்பிட்டுப் பார்த்தது. முதல் நாளே கீழ் கிளைக்கு அதனால் பறக்க முடிந்தது. இரண்டே வாரத்தில் காளை சொன்னது போலவே உச்சிக்கிளைக்கே பறந்தது குருவி. பறந்து சென்று உச்சிக் கிளையில் 'அமர்ந்தது, பரவசமடைந்தது. சில நொடிகள்கூட ஆகியிருக்காது... எங்கிருந்தோ குறிபார்த்து சுடப்பட்ட குண்டுபாய்ந்து குருவி கீழே விழுந்து செத்தது.

இந்தக் கதையின் நீதி என்ன வென்றால், பல நேரங்களில் மிகச் சாதாரண விடயம் கூட உங்களை உச்சிக்கு எடுத்துச் செல்லும். ஆனால் உங்கள் உச்சியிலேயே தொடர்ந்து இருக்க வைக்காது. நீங்களும் இப்படித்தான், எப்படியாவது ஆனந்தத்தை அடைந்து விட்டால் போதும் என்று நினைக்கிறீர்கள். சில நேரங்களில் ஆனந்தத்தை அடைகிறீர்கள். ஆஹா உச்சிக்கு வந்து விட்டோம் என எண்ணுகிறீர்கள், ஆனால் அங்கேயே நிலைத்து இருக்க முடிவதில்லை. ஏனெனில் வாழ்க்கையை இன்னமும் சரியாக நீங்கள் புரிந்து கொள்ளவில்லை நீங்கள் ஆனந்தத்திலேயே இருக்க வேண்டுமென்றால், உள்நிலையிலும், வெளிநிலையிலும் ஒருகட்டத்தை அடையவேண்டு மென்றால், சரியான செயல்களைச் செய்தாக வேண்டும். ஆனால் மக்கள், சரியான செயல்களைச் செய்யாமலேயே, எப்படியோ எதையாவது செய்து அந்தக்கட்டத்தை அடைந்து விட நினைக்கிறார்கள். அது அப்படி வேலை செய்யாது.


சுதந்திரம் மலர...

ஆனந்தம் என்பது ஒரு உணர்ச்சி அல்ல. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு விதமான இனிமை உங்கள் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் ஊடுருவி நிறைந்து இருந்தால், நீங்கள் ஆனந்தமாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆனந்தமாக இருப்பது என்றால், ஏதோ நகைச்சுவைக் காட்சியாகப் பார்த்து சிரித்து மகிழ்வது அல்ல.

அப்படி சிரிப்பது ஒன்றும் தவறு இல்லை; ஆனால் இந்த ஆனந்தம் நம்மிடம் நீடித்திருப்பது அந்த ஒரு கணம் மாத்திரம்தான். மறுகணம் காணாமல் போய்விடும். நாள் முழுவதும் நம்மால் நகைச்சுவைக் காட்சிகளைப் பார்த்து, சிரித்துக் கொண்டிருக்க முடியாது இல்லையா?

இசையோ நடனமோ விளையாட்டோ அல்லது உறவோ... ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் எந்த செயலில் ஈடுபட்டாலுமே, சலிப்பு வந்து விடும். ஆனால் உங்கள் உயிர்த்தன்மை ஒரு போதும் சலிப்படைவதே இல்லை வாழ்வின் ஆதாரமே இது தான்... உங்கள் உயிர்த்தன்மையோடு உங்கள் உடல், மனம், உணர்ச்சி இவை நன்றாக ஒருங்கிணைந்து இருந்தால், ஆனந்தம் என்பது உங்கள் இயல்புநிலை என்பதை உணர்வீர்கள்.

அதன்பிறகு அதை வெளியில் எங்கும் தேடி அலையமாட்டீர்கள்.



## ஆன்மீகம் 03

ஆனந்தத்தை உங்களுக்குள்ளே உணர ஆரம்பித்தபிறகு, ஆனந்தம் தேடி உறவுகளை நோக்கி ஓடமாட்டீர்கள். அவர்களிடமிருந்து ஆனந்தத்தை பிழிந்து எடுக்கவோ அல்லது பிச்சை எடுக்கவோ முயற்சிக்க மாட்டீர்கள். மாறாக, உங்கள் ஆனந்தத்தை அவர்களோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்குவீர்கள்.இப்படியான ஆனந்தத்தைப் பகிர்ந்து கொள்வதால், உங்கள் வாழ்வின் தரம் உங்கள் உறவுகளின் தரமே மாறிவிடும். இது மிகப்பெரிய மாற்றம். இப்படி நீங்கள் வாழும் போது, மிகவும் சுதந்திரமாக, என்ன செயல் தேவையோ அதை மட்டுமே செய்வீர்கள். தேவை இருக்கிறதோ இல்லையோ... ஆனால் கட்டாயமாக செயல் செய்தே ஆகவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஒழிந்துவிடும்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இலங்கையில் தமிழியல் ஆய்வு: பண்பாடு

03



பிரதேச அபிவிருத்தி இந்துசமய இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சினால் 1982 இல் நடாத்தப்பட்ட, அகில உலக இந்துமாநாடு தொடர்பாக ஒரு சிறப்புமலர் வெளியிடப்பட்டது. அதில் மு.ஞானப்பிரகாசம் அவர்களுடைய "Vedas and Agamas",வி.சிவசாமியின் "Is the Study of Sanskrit relevant to Hindu Culture?",எஸ்.சர்வானந்தாவின் "History and Dåvelopment of Hinduism in Srilanka" ஆர்.என் சிவப்பிரகாசத்தின் "Architects of the Hindu Heritage of Srilanka", வை.கா.சிவப்பிரகாசத்தின் "The Temple of vishnu at Devinuvare", நா.சுப்பிரமணியத்தின் "கீதை ஒரு வாழ்வியல்நெறி",பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் "பெண்களின் கடமையும் இடமும்", வித்துவான் வசந்தா வைத்தியநாதனின் "பெண் என்னும் பெரும்போது", சன்தனா நல்லிங்கத்தின் "குரு அருளும் ஆழ்நிலைத் தியானமும்", க.சி. குலரத்தினத்தின் "மேற்கு நாட்டவர் நோக்கில் இந்துமதம்",க.சொர்க்கலிங்கத்தின் "இலங்கையில் முருக வழிபாடு", கி.இலட்சுமண ஐயரின் "இலங்கையில் இந்து சமயம்" என்னும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 1997இல் ஆய்வரங்குக் கட்டுரைகள் என்றொரு தொகுதியினை வெளியிட்டது. அதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் வருமாறு சி.க.சிற்றம்பலம் "ஈழத்துப் பிராமணக் குலங்களும் அக்கிரகாரங்களும்-கி.பி 13ஆம் நூற்றாண்டுவரை ஒரு வரலாற்று நோக்கு", வி.சிவசாமியின் "முருகவழிபாடு தோற்றமும் வளர்சியும்",மா.வேதநாதன் "திருமுருகாற்றுப்படை சித்தரிக்கும் முருகன்" என்.சண்முகலிங்கன் "கதிர்காம முருகன் -ஒரு மானுடவியல்தரிசனம்", ம.இரகுநாதன் "வன்னியில் கண்ணகை வழிபாடு",சோ.கிருஷ்ணராஜா "தமிழின் முதலாவது பக்தியுகமும் சைவசித்தாந்தத்தின் பிறப்பும்", ஏ.என். கிருஷ்ணவேணி "சைவசித்தாந்த தத்துவம் திருமந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு", க. விவானந்த மூர்த்தி, "சைவசித்தாந்தத்தில் உவமானம் மெய்கண்ட சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பார்வை", விஜயலட்சுமி சிவச்சந்திரன் "நால்வர் பாசுரங்களில் வேதம்", கலைவாணி இராமநாதன் "பழந்தமிழ் இலக்கியங்களிற்காணும் சைவத்தின் மூலக்கூறுகள்", சுகந்தினி பொன்னம்பலம் "இந்துக்களின் வாழ்வியலில் ஒழுக்கத்தின் பெறுமானங்கள்", மனோன்மணி சண்முகதாஸ் "காரைக்காலம்மையார் புராணம் ஒரு காலத்தின் தேவை", க. இரகுபரன் "பாவை மரபு", சீதாமணி கமலேந்திரன் "வழக்கொழிந்துபோன சைவமரபு பாசுபதம்- ஓர் ஆய்வு".

சுதந்திரத்திற்குப்பின் "இலங்கை ஒரு பன்முகப்பார்வை" என்னும் வெளியீட்டில் (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்1998) க.ந.வேலன் யோக சுவாமிகள் "ஆன்மீக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம்", குமாரசாமி சோமசுந்தரம் "பாரம்பரிய சமயமும் நவீன சமயமும்", சாந்தி நாவுக்கரசன் "அறநெறிக்கல்வியின் தேவையும் வளர்ச்சியும்" என்னும் கட்டுரைகளை எழுதியுள்ளார்.


யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் நடத்தும் சேர் பொன் இராமநாதன் லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரைகளிலே பல, இந்து -சைவ சமயம் பற்றியனவாய் அமைந்தன. கா. கைலாசநாதக்குருக்களின் "இந்துப் பண்பாடு -சிலசிந்தனைகள்" (1985), ஆ.வேலுப்பிள்ளையின் அரசகேசரியின் "இரகுவம்சமும் அது எழுந்த இந்துப் பண்பாட்டுச்சூழலும்(1988), பல்கலைக்கழக மாணவர் சஞ்சிகைகளிலே பல சமய ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இந்து தர்மம், இந்துநெறி, இந்துநதி, தமிழோசை ஆகிய சஞ்சிகைகளிலேயே பின்வரும் கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

நா.வேல்முருகு "ஈழத்தில் இந்து சமய வளர்ச்சி" (1964), அ. சண்முகதாஸ்"சமயமும் இலக்கியமும்" (1964), சு.வித்தியானந்தன் "ஈழத்தில் முருக வழிபாடு"(1964),பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை "அத்வைதம்" சி.க.சிற்றம்பலம்"Hinduism in Ancient Nurima",கா. கைலாசநாதக் குருக்கள்"மீமாம்சா தரிசனம்-பிராமணங்கள்"(1985), கலைவாணி இராமநாதன் "வேத உபநிடதங்களில் அறிவாராய்ச்சியியற் கருத்துக்கள்" (1986), ஆ.வேலுப்பிள்ளை "திருகோணமலைத் தமிழ்மந்திர மாலை" (1987), சி.க. சிற்றம்பலம் "கிழக்கிலங்கையும் ஆதிஇந்து மதமும்"(1987),வ.ஆறுமுகம் "இந்து சமயம் கற்பித்தல் சில பிரச்சினைகள்" (1987), செ. கிருஷ்ணராசா "தமிழ் மரபில் பத்தினிவழிபாடு சில சிந்தனைகள்"(1987), என் சண்முகலிங்கன் "ஈழத்தில் திருவிளக்குப் பூசையின் எழுச்சியும் அதன் சமூகப் பின்னணியும்" (1987), ஆ. வேலுப்பிள்ளை "இந்து வெளியிலிருந்து திருகோணமலை வரை தென்கீழ்த் திசை வழிவந்த பாசுபதம்" (1987).

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் அணி நடை நிகழ்வினையும் பாடசாலையின் அதிபர் சி.சிவகணேசன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்

(படங்கள் :- அல்வாய் செய்தியாளர்)

## ஈழத்தமிழர்கள் மீது
# சோனியாவுக்கு அக்கறை இருந்தால் முதலில் நளினியை விடுதலை செய்யட்டும்
## சிறிதரன் எம்.பி.கருத்து



ஈழத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நாம் இலங்கைத் தமிழர்களுடனேயே இருக்கின்றோம் என அண்மையில் கருத்து வெளியிட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியாகாந்தி அதற்கான நல்லெண்ண நடவடிக்கையாக முதலில் நளினியை விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் லண்டன் சென்றிருந்த சோனியாகாந்தி அங்கு உலகத்தமிழர் பேரவையின் நிர்வாகிகளுடனான சந்திப்பின் போது வன்னிப்போரில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த காணொளியை தான் பார்வையிட்டதாகவும் இவ்விடயத்தில் தான் அக்கறை கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், காலத்திற்கு காலம் வரும் இந்திய தலைவர்கள் தமிழர் நலன்களில் தமக்கு அக்கறை இருப்பதாக கூறுகின்றனர்.

ஆனால், அவை ஒருபோதும் செயலில் காட்டப்படுவதில்லை. தமிழர் நலனுக்கென உருவாக்கப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு சரத்துக்கூட இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. அதனை நிறைவேற்றுவதற்கு இந்தியா எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆரம்பத்தில் நான்கைந்து போராளிக் குழுக்களை உருவாக்கி தமிழர்களை பிளவுபடுத்திய இந்தியா தற்போதும் அவ்வாறான வேலைகளில் ஈடுபடுகின்றது.

ராஜீவ்காந்தியின் கொலையுடன் தொடர்புடையவர் எனக் கூறி கடந்த இருபது வருடங்களாக நளினி இந்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரை விடுதலை செய்வதன் மூலமாக சோனியா காந்தி தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார். (5)

# மாகாண மட்டத்தில் பாடசாலை கட்டமைப்பு முறைகேட்டில் ஆராய்வு

மாகாண் மட்டத்தில் பாடசாலை கட்டமைப்புகள் தொடர்பில் தற்போது விசேட ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் மத்தியில் உரையாற்றிய அவர்,

கிராமிய பாடசாலைகளில் வகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளவிதம் முறையாக இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு நகரை அண்மித்த பாடசாலைகளை விட வெளிமாவட் டங்களில் உள்ள பாடசாலைகளில் கல்விமுறைகள் குறித்து நெருக்கடிகள் காணப்படுகின்றன.

உயர்தர விஞ்ஞானபிரிவில் 5 இற்கும் குறைவான மாணவர்களை மாத்திரம் கொண்ட 93 பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் இருக்கின்றன.

அதேபோன்று கலைப்பிரிவு என உயர்தரத்தில் கற்பிக்கப்பட்ட போதும் சராசரியாக 15 மாணவர்களைக் கொண்ட 543 பாடசாலைகள் இலங்கையில் இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண மட்ட பாடசாலைகள் ஆயிரத்து 224 இல் குறிப்பாக 32 பாடசாலைகளில் மாணவர்கள் பெரும்பாலும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என தமக்கு அறியக்கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.(4-2)

# வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இரு தீவுகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன

கற்பிட்டிக்கு அருகில் உள்ள வெள்ளைத் தீவு, இன்பத்தீவு ஆகிய இரு தீவுகளும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 30 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பொருளாதார பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இத்தகவலை தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், உல்லாசப்பயணத்துறையில் முதலீடு செய்வதற்காக இத்தீவுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்விரு தீவுகளும் ரூபா 18 மில்லியனுக்கு 30 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இருந்தபோதும் ஒவ்வொரு 5 வருடமும் குத்தகை ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

வெள்ளைத் தீவு எனும் தீவு 3.7 மில்லியன் ரூபாவுக்கு இலங்கை, மாலைதீவு, சுவிட்ஸர்லாந்து நாடுகளுக்கிடையிலான கூட்டு முதலீட்டுத் திட்டமொன்றுக்காக வழங்கப்பட்டுள்ளது. இன்பத்தீவு 14 மில்லியன் ரூபாவுக்கு இந்திய கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. (4-2)

# விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை சென் ஜேம்ஸ்ஆலயபின்பகுதியில் (பாங்சால் வீதி வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி தமது வளர்ப்புநாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (2)




★ 1878 - பிரித்தானியக் கப்பல் HMS யூரிடைஸ் மூழ்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1882 - காசநோயை உருவாக்கும் நோய்க் கிருமியைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக ராபர்ட் கோக் அறிவித்தார்.

★ 1923 - கிறீஸ் குடியரசாகியது.

★ 1944 - ரோமில் ஜேர்மனியப் படைகள் 335 இத்தாலியப் பொதுமக்களைப் படுகொலை செய்தன.

★ 1944 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் சகான் என்ற இடத்தில் ஜேர்மனிய சிறையில் இருந்த 76 போர்க் கைதிகள் தப்பித்தனர்.

★ 1947 - மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் பிரித்தானிய ஆளுநரானார்.

★ 1965 - நாசாவின் ரேஞ்சர் 9 விண்கலம், சந்திரனில் மோதும் முன்னர் சந்திரனின் புகைப்படங்களை வீடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் பார்க்கக்கூடிய படங்களாக மாற்றி பூமிக்கு அனுப்பியது.

★ 1972 - ஐக்கிய இராச்சியம் வட அயர்லாந்தில் தனது நேரடி ஆட்சியை ஏற்படுத்தியது.

★ 1998 - இந்தியாவில் டண்டான் பகுதியில் இடம்பெற்ற புயலில் 250 பேர் கொல்லப்பட்டு3ஆயிரத்துக்கு மேல் காயமடைந்தனர்.

★ 1999 - கொசோவோ போர்: நேட்டோ படைகள் யூகொஸ்லாவியாவில் வான் தாக்குதலை நடத்தின.

★ 1999 - பெல்ஜியத்தில் மோண்ட் பிளாங்க் சுரங்கத்தில் சுமையுந்து ஒன்றில் தீப் பிடித்ததில் 39 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1776 - முத்துசுவாமி தீட்சிதர், இசை மும்மூர்த்திகளில் ஒருவர். (இ. 1835)

★ 1884 - பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1966)

★ 1903 - அடொல்ஃஃப் பியூட்டினண்ட், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1995)

★ 1923 - டி.எம்.சௌந்தரராஜன், பாடகர்

★ 1917 - ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1997)

★ 1984 - கிரிஸ் பாஷ், அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்


### இறப்புகள்

★ 1905 - ஜூல்ஸ் வேர்ன், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1828)

★ 1988 - சீர்காழி எஸ்.கோவிந்தராஜன், கர்நாடக, திரையிசை பாடகர் (பி. 1933)

★ 2002 - சேசார் மில்ஸ்டைன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1927)

**1965 - டட்லி சேனநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் சிவன் ஆலயச் சின்னங்கள்

## 800 ஆண்டுகளுக்கு முற்பட்டவையா?

செல்வி சசிதா குமாரதேவன்
தொல்லியல் விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**பார்வதி விக்கிரகம்?**

இங்கு கிடைத்த விக்கிரகங்களுள் பலரின் கவனத்தை ஈர்த்த கலை வடிவமாக அம்மன் விக்கிரகம் காணப்படுகிறது. கருங்கல்லில் முப்பரிமாண நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ் விக்கிரகம் பீடமற்ற நிலையில் $4\frac{1}{2}$ அடி உயரத்தையும், பீடத்துடன் $5\frac{1}{2}$ அடி உயரத்தையும் கொண்டுள்ளது. ஒரு அடி உயரமுடைய கேச மகுடம் மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. மேல் பகுதியில் உச்சிக் கொண்டையும், நெற்றிப்பட்டத்திற்கு மேல் இரத்தினாரமும், மகுடத்தின் முற்பக்கத்தில் குறுக்காகவும் நிலைக்குத்தாகவும் மூன்று குறியீடுகளும் காணப்படுகின்றன. நான்கு கைகளைக் கொண்ட இவ்விக்கிரகத்தின் வலது மேற்கரத்தில் வெண்டையமும், இடது மேல் கரத்தில் தாமரையும் காணப்படுகின்றன. மற்றைய இருகரங்களில் வலதுகரம் அபயகஸ்தத்தையும், இடதுகரம் வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன. இதன் காதில் மகர குண்டலமும், கழுத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ள பதக்கமும் காணப்படுகின்றன. இதன் இடுப்பு ஆறு அங்குல அகலத்தையும், அதன் கீழுள்ள தொடைப் பகுதி ஒன்பது அங்குல அகலத்தையும் கொண்டுள்ளது. இடுப்பிலுள்ள சிங்க முகப்புடைய மேகலை இடுப்பைச் சுற்றி தொங்கு சங்கிலியால் இணைக்கப்பட்டிருப்பதையும், இதனுடன் இணைந்த நிலையில் உள்ள பீதாம்பரம் இரு கால்களுக்கிடையே கணுக்கால் வரையுள்ள கால் சலங்கை வரை நீண்டிருப்பதையும் தெளிவாகக் காணமுடிகின்றது. வலது கீழ் கரத்தின் முழங்கையுடன் வெளிப்படுத்தப்பட்ட முடிக்குஞ்சரமானது முற்பக்கத்தில் தெரியுமாறு இருப்பதும், இடது பக்க தோளின் மேலால் செல்லும் முப்புரிநூல் தெளிவாக செதுக்கப்பட்டிருப்பதும் இவ்விக்கிரகத்தில் காணக்கூடிய சிறப்பம்சங்களாகும். இந்திய தொல்லியல் அறிஞர் கலாநிதி இராஜகோபால் இவ்விக்கிரகத்தின் அங்க இலட்சணங்களை ஆதாரமாகக் கொண்டு இதைப் பார்வதிக்குரிய விக்கிரகம் எனக் கூறுகிறார்.



**சூரியன்**

இவ்விக்கிரகம் $2\frac{1}{2}$ அடி உயரமுடையது. நிற்கின்ற சமபங்கு நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகத்தின் கரண்ட மகுடம் ஆறு அங்குல உயரமுடையது.

இம்மகுடத்தின் பின்னாலுள்ள ஒளிவட்டம் நீள்வட்ட வடிவில் அமைந்துள்ளது. ஒன்பது அங்குல உயரத்திலுள்ள சதுர வடிவிலான பீடத்தில் ஒழுங்கற்ற பகுதி மீது மீண்டும் வட்டவடிவிலான தாமரை ஆசனத்தின் மீது இவ்விக்கிரகம் அமைந்துள்ளது. அதன் இரு கரங்களிலும் தாமரை மலர் காணப்படுகின்றது. ஏனைய உடல் உறுப்புக்களும், ஆடை ஆபரணங்களும் சிதைவடைந் திருப்பதால் அவை பற்றி பூரணமாக கூறமுடியாதிருக்கின்றது.



மேற்குறிப்பிட்ட நான்கு விக்கிரகங்களும் தற்போதைய சாவகச்சேரி நகரத்தின் குறிப்பிட்ட மிகச் சிறிய வட்டத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டிருப் பதை நோக்கும் போது இவ்விக் கிரகங்களுக்குரிய ஆலயம் ஒன்று இவ் வட்டாரத்திற்குள் இருந்துள்ள தென்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த இடம் தற்போது புதிய நீதிமன்றம் அமைப் பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பழைய நீதிமன்றம் அமைந்திருந்த இடம் என அடையாளம் காணமுடிகிறது. தற்போது இங்கு புதிய நீதிமன்றத்திற்காக அத்திவாரம் வெட்டும் போது பரவலாக வெளிவந்த பொழிந்த முருகக்கற்களும், செறிவாக வெளிவந்துள்ள செங்கட்டிகளும் ஒரு ஆலயத்திற்கு உரியவை என்பதில் ஐயமில்லை. இங்கு கிடைத்த கற்களில் மிகப் பெரிய மரத்தூண்களைப் பொருத்தி கட்டடம் அமைக்கப்பட்டதற்கான சான்றுகளும் காணப்படுவதால் இங்கிருந்த ஆலயத்தின் ஒரு பகுதி மரத்தைப் பயன்படுத்தியும் அமைத் திருக்கலாம் என்பது தெரிகிறது.



இத்தகைய ஒரு வரலாற்றுப் பழைமைவாய்ந்த ஆலயம் எவ்வாறு அழிந்தது அல்லது அழிக்கப்பட்ட தென்பதற்கு ஐரோப்பியர் ஆட்சிக்கால ஆவணங்களே சாட்சியாக உள்ளன.

**ஆலயத்தின் தோற்ற காலம்**

இங்கு கிடைத்த அம்மன் விக்கிரகங்களின் கலைமரபுகளை ஆய்வுசெய்த தமிழகத் தொல்லியல் அறிஞர் கலாநிதி ஸ்ரீதரன் அவர்கள் இவற்றின் காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுகிறார். பேராசிரியர் பூபரட்ணம் இவ்விக்கிரகங்களில் காணப்படும் நீண்ட மகுடமும், இடுப்பிலுள்ள சிங்க முகப்புடைய மேகலையும் சோழர் ஆட்சியை அடுத்து ஏறத் தாழ நூறு ஆண்டுகள் தமிழகத்தில் வழக்கில் இருந்த கலை மரபு என ஆதாரம் காட்டி இவற்றின் காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். இக் காலக் கணிப்புகள் எல்லாம் இங்கிருந்த ஆலயம் கி.பி.15 நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பதையே உறுதி செய்கின்றன.

**ஆலயத்தின் அழிபாடு**

யாழ்ப்பாண அரசு காலத்தில் இந்து மதம் அரச ஆதரவு பெற்ற ஓர் மதமாக விளங்கியது. ஆயினும் இவ்வரச காலத்திற்குரியதெனக் கருதக்கூடிய ஒரு ஆலயந்தானும் இதுவரை முழுமையாகப் பாதுகாக்கப்படவில்லை.

இதற்குப் போர்த்துக்கேயரும் பின் வந்த ஒல்லாந்தரும் கடைப்பிடித்த இந்து மதத்திற்கு எதிரான கலையழிவுக் கொள்கை ஒரு முக்கிய காரணமாகும். போர்த்துக்கேய ஆசிரியரான கெய்றோஸ் பாதிரியார் தமது மத நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்த சிறியதும் பெரியதுமான 500 இந்து ஆலயங்களை இடித்து அழித்ததாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் இருந்து பெறப்பட்ட கற்களைக் கொண்டே கோட்டைகளும், பிற நிர்வாகக் கட்டடங்களும் அமைக்கப்பட்டதாகக் கூறுகிறது. அது உண்மையென்பதை தற்போது கோட்டை அகழ்வாய்வில் கிடைத்து வரும் ஆலய அழிபாடுகள் உறுதி செய்கின்றன. இந்நிலையே சாவகச்சேரி நீதிமன்ற வளவில் இருந்த ஆலயத்திற்கும் ஏற்பட்டிருக்கும் எனக் கூறலாம்.

(முற்றும்)

# கள்ளிக்காட்டு இதிகாசம்...

முழுவீடும் முங்கிப்போயிருங்கிற மாதிரி தண்ணி. நீந்திக்கிட்டே திரும்பிப்பாத்தாரு பேயத்தேவர். கதவு சன்னல் இல்லாத சுவருக செத்துப்போயி வாய்தெறந்து கெடக்குற அப்பன் பாட்டன் பொணம்மாதிரி 'ஆ'ன்னு கெடக்குதுக. மரத்தூணத் தண்ணியில இழுத்துக்கிட்டே வீட்டுக்குள்ளயிருந்து வெளி வாசலுக்குக் கொண்டுவர்றாரு. வெளிய வந்து பாத்தா அதுதான் கள்ளிப்பட்டிங்குறதுக்கு அடையாளமே இல்ல. அம்பலக்கல்லு முங்கிப் போச்சு; அரசங்குட்டி முங்கிப்போச்சு; ஆசாரி கவுண்டர் வீடு முங்கிப் போச்சு. வேப்பமரம்மட்டும் முழுசா முங்காமத் தல நீட்டி நிக்குது.

வாசலுக்கு வெளியே தெருவுக்கு நீந்திவந்து வாழ்ந்த வீட்டை அண்ணாந்து பாத்தாரு; அழுகை அழுகையா வருது. 'உள்வீடு அப்பன் பாட்டன் கட்டினது. சுத்திவச்ச மண்சுவரு அழகம்மாளும் நானும் கட்டினது' அத ஒரு கையில தொட்டுத் தொட்டுப்பாத்தாரு; சாந்து பூசாத மண்சுவத்துல சரளக்கல்லுல கன்னந்தேச்சு அழுதாரு. "பொறந்த பூமி போச்சு. பொழைச்ச பொழைப்பும் போச்சு. நீயும் நானும் உசிரொட்டி ஒண்ணாயிருந்த ஊரும் போச்சு. போறேன்தாயி! எல்லாருக்கும் புடிமண்ணு நான் குடுத்தேன். எனக்குப் புடிமண்ணு நீ குடு!

வேப்பமரத்து இடுக்குல தூணத் தக்கவச்சுச் சிக்கவைச்சுட்டு, அவரும் அழகம்மாளும் சேந்து வச்ச மண்சொவருக்குக் கீழ புடிமண்ணெடுக்க முங்கினாரு தண்ணிக்குள்ள. தண்ணிய மேப்பக்க மாத்தள்ளித் தரைக்குப் போயிட்டாரு. உள்ளங்கை எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு மண்ணை அள்ளுனாரு. மேலே வாரதுக்காகத் தரையை ஓங்கி ஒரு மிதி மிதிச்சு உந்துனாரு. கைய மேலே தூக்கி விசுக்குன்னு வெளியவாரப்ப, தண்ணியில ஊறிப் போயி மசமசன்னு இருந்த மண்சுவரு மடமடன்னு சரிஞ்சு விழுந்ததையா பேயத்தேவர் மேல.

என்னமோ ஆகிப்போய்ச்சுன்னு கைகால ஒதறி இங்கிட்டும் அங்கிட்டும் மிசுங்கப்பாத்தாரு; அதுக்குள்ள இன்னொரு பாதிச்சுவரும் 'டம்மு டம்மு'ன்னு இடிஞ்சு விழுகுது; தண்ணிக்கு மேல வரப்பாத்த ஆளத் தரையில போட்டு அமுக்குது. இந்தா இந்தான்னு முக்கி முக்கிப்பாக்கிறாரு. ரெண்டு கையிலயும் எடுத்த புடிமண்ண விடாமக் கடைசி முயற்சியாக் காலமட்டும் ஆட்டி அசைக்கிறாரு. அப்பத்தான் மிச்சமிருந்த அடிச்சுவரு 'பொத்தட்டீர்'ன்னு போட்டு ஆள அமுக்கியேபுடிச்சு. அதுவரைக்கும் தம்கட்டிவச்ச மூச்சும் போச்சு; கடைசியா பெரும்பாடுபடவே பெறந்த பேயத்தேவர் உசுரு, தண்ணிக்கடியில மண்ணுக்குள்ளயே போயிருச்சு. மண்ண விடமாட்டேன் மண்ண விடமாட்டேன்னு கடைசிவரைக்கும் கருமாயப்பட்ட ஆள கடைசியா மண்ணுவிடல.

வேப்பமரத்துல பேயத்தேவர் சிக்கவச்ச தூணு மட்டும் அலையடிச்சு அலையடிச்சு கரைவந்து சேர்றதைப்பாத்து "தாத்தா"ன்னு உசுரையெல்லாம் திரட்டி ஒரே கத்தாக் கத்தினான் மொக்கராசு. அவன் கத்துன கத்து காத்துல பறந்து காதுல விழுந்ததும் 'யப்பே'ன்னு கதறினா மின்னலு. 'அய்யா'ன்னு அலறினா முருகாயி.

ஒரு மகாமனுசனக் கொன்டுபுட்டமேன்னு ஒரு நிமிசம்கூட மவுனம் காக்காம அதுபாட்டுக்குப் போய்க்கிட்டேயிருந்திச்சு அல. இன்னைக்கும் வைகை அணை மேல அடிக்கிற வருச நாட்டுக் காத்து மட்டும் ஒப்புச்சொல்லி அழுது போகுது 'ஓ'ன்னு. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.படைகள் நடத்திய தாக்குதலில் கடாபியின் கடற்படைத்தளம் அழிப்பு

(பெங்காசி)

அமெரிக்கக் கூட்டுப் படைகள் நேற்று முன் தினம் நடத்திய தாக்குதலில் கடாபியின் கடற் படைத் தளம் ஒன்று முற்றிலும் அழிக்கப் பட்டது.

இந்நிலையில் கடாபியை ஆட்சியை விட்டு இறக்குவது அமெரிக்காவின் நோக்கம் அல்ல என்று அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டமாக தெரிவித்து விட்டார். ஐ.நா. பாதுகாப்பு குழுவின் லிபியா மீதான போர் விமானங்கள் பறக்க தடை, தீர்மானத்தை அமுல்படுத்த அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், கனடா, கட்டார், ஐக்கிய அரபு நாடுகள், டென்மார்க், பெல்ஜியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் கூட்டுப் படைகள் லிபிய விமானப் படைகள் மீது கடும் தாக்குதலை கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்டு வருகின்றன.

தலைநகர் டிரிபோலியின் தென்பகுதியில் உள்ள பாப் அல் அஜிசியா என்ற கடாபியின் இராணுவ வளாகத்தின் மீது நேற்று முன் தினம் தாக்குதல் நடத்தப்பட்டது. டிரிபோலியின் புசட்டா கடற்படை தளம் நேற்று முன் தினம் நடந்த ஏவுகணை தாக்குதலில் முற் றிலுமாக அழிக்கப்பட்டது. டிரிபோலியில் கூட்டுப் படை விமானங்கள் மீது கடாபி இரா ணுவம் , பீரங்கிகள் மூலம் கடும் தாக்குதல் நடத்தியது. ஜுவாரா, சிர்ட், பெசா, ஜின்டான் மற்றும் அஜ் தாபியா ஆகிய நகரங்கள் மீதும் அமெரிக்கக் கூட்டுப் படை போர் விமானங் கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தின.

அமெரிக்காவின் எப்-15 ரக போர் விமா னம் ஒன்று நேற்று முன்தினம் லிபியாவில் விபத்துக்குள்ளானது. எந்தப் பகுதியில் விமா னம் விழுந்தது என்பது தெரியவில்லை. இவ் விபத்து விமான கோளாறால் ஏற்பட்டது என்று கூறிய அதிகாரிகள், விமானிகள் பத் திரமாக மீட்கப்பட்டதாக தெரிவித்தனர்.

இந்நிலையில், மிஸ்ரட்டா நகருக்குள் நேற்று முன்தினம் புகுந்த கடாபி இராணுவம் கண் ணில்பட்டவர்களை எல்லாம் சுட்டுத் தள்ளி யது. இதில் ஒரு காருக்குள் பதுங்கியிருந்த நான்கு சிறுவர்கள் உட்பட மொத்தம் 49 அப்பாவிகள் பலியாகினர். கடாபி இராணுவத்திற்கும் எதிர்ப் பாளர்களுக்கும் இடையில் அங்கு கடும் மோதல் நடந்து வருகிறது.

**தாக்குதல் குறைகிறது**

அமெரிக்காவின் ஆபிரிக்க படைப்பிரிவுத் தளபதி ஜெனரல் கார்ட்டர் எப்.ஹாம் கூறிய தாவது,

கடாபியின் இராணுவ மையக் கட்டுப் பாட்டை குலைத்து மக்களைக் காப்பதுதான் எங்கள் நோக்கம். எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவளிப்பதோ கடாபியை ஆட்சியை விட்டு நீக்குவதோ நோக்கம் அல்ல. எங்கள் தாக்கு தல் சிறிது சிறிதாக குறைந்து வருகிறது என அவர் தெரிவித்தார்.

**ஒபாமாவுக்கு எதிர்ப்பு**

லிபியா மீதான இராணுவ நடவடிக் கைக்கு இந்தியா ,பிரேசில், சீனா, ரஷ்யா, ஜேர்மனி, ஆபிரிக்க யூனியன் எனப் பல் வேறு முனைகளில் இருந்து எதிர்ப்பு வெளிப் பட்டு வரும் நிலையில், தற்போது அமெரிக்கா விலேயே ஒபாமாவின் முடிவுக்கு எதிர்ப்பு எழுந்துள்ளது.

ஒபாமாவின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க் கட்சி எம்.பி.க்கள் பலர் பாராளுமன்றத்தை கலந்தாலோசிக்காமல், லிபியா மீதான இரா ணுவ நடவடிக்கையில் அமெரிக்கா கலந்து கொள்ளும் என்று ஒபாமா எடுத்த முடிவு அவ ரது அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது என்று விமர்சித்துள்ளனர். (2-4)



புகுஷிமா மாகாணத்தில் உள்ள கொரியாமா நகரில் உள்ள தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மூதாட்டி ஒருவருக்கு கதிர்வீச்சு பாதிப்பு உள்ளதா என அதிகாரி ஒருவர் பரிசோதிப் பதைப் படத்தில் காணலாம்.

# அணு உலை கட்டுப்பாட்டு அறைக்கு மீள மின்னிணைப்பு வழங்கல்

சுனாமி கடற்சீற்றத்தால் பெரிதும் பாதிக் கப்பட்ட ஜப்பான் புகுஷிமா அணுஉலை களின் கட்டுப்பாட்டு அறைக்கு மின் இணைப் புகள் மீள வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனூடாக அணுஉலைகளை குளிரூட் டும் நடவடிக்கைகளை விரைவாக முன் னெடுக்க முடியும் என நம்பிக்கை வெளி யிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கதிரியக்கம் தொடர்ந் தும் கசிந்து வருவதாக ஐக்கிய நாடுகளின் அணுசக்தி செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் பிரிவு தெரிவித்துள்ளது.எனினும் குறிப்பாக எந்த இடத்திலிருந்து கசிவு ஏற்படு கிறது என்பது குறித்து விஞ்ஞானிகள் நிச்சய மற்ற நிலையில் உள்ளனர்.

இந்தநிலையில் சுமார் 21 ஆயிரம் பேர் கடந்த இயற்கை அனர்த்தத்தின் போது உயிரிழந்ததாக ஜப்பான் அரச புள்ளிவிபரங் களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று இலக்க அணு உலையில் மின் சார விநியோகம் மேற்கொண்டதன் பின்னர் அடுத்தடுத்த மணித்தியாலங்களில் ஏனைய 6 அணு உலைகளுக்கும் மின்சார விநி யோகம் வழங்கப்படும் என புகுஷிமா அதி காரிகள் அறிவித்துள்ளனர். (2-4)

# லிபியாவில் தாக்குதல் நடத்தாமல் கனேடிய போர் விமானங்கள் திரும்பின

(டிரிபோலி)

லிபியா மீது கூட்டுப்படைகள் தாக்குத லில் ஈடுபட்டு வருகின்றன. லிபிய மக்கள் மீது கேணல் கடாபி ஆட்சியாளர்களே தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தவும் பொதுமக்களை காப்பாற்றவும் ஐ.நா பாது காப்பு கவுன்சில் லிபிய வான் எல்லையில் விமானம் பறக்கத்தடை விதித்துள்ளது. இந்த தடையை செயற்படுத்தும் விதமாக லிபியா போர் விமானங்களை வீழ்த்தவும் தரைப் படைகளை ஒடுக்கவும் கூட்டுப்படைகள் தாக் குதல் மேற்கொண்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அமெரிக்கப்படைகள் உள்ளன. இந்தத் கூட்டுப்படையில் கனேடிய போர் விமானங்களும் உள்ளன. நேற்று முன்தினம் காலை இரு கனேடிய சி எப் 18 போர் விமான ங்கள் இலக்கை தாக்காமல் திரும்பின.

குண்டுவீச்சில் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்கிற அச்சம் இருந்த தால் அந்த விமானங்கள் குண்டு வீசாமல் திரும்பின. லிபிய போர் விமானங்களை வீழ்த்த கனேடிய போர் விமானங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது என ஒட்டா வாவில் மேஜர் ஜெனரல் பாம் லாசன் தெரி வித்தார்.

லிபியாவில் குறிப்பிட்ட இலக்கில் கனேடிய போர் விமானம் தாக்குதல் நடத்தாமல் திரும் பியது குறித்து அவர் கூறுகையில், பொது மக்களுக்கு சேதம் ஏற்படக்கூடாது என குண்டு வீச்சை தவிர்த்தோம் என்றும் கனேடிய போர் விமானத்திற்கு எந்தவித அச்சுறுத்தல் இல்லை ன்றும் அவர் கூறினார். (2-4)

# அணு உலைகளின் கதிர்வீச்சு தாக்கம் பிரித்தானியாவை நோக்கி நகர்வு

## ஆராய்ச்சியாளர் தெரிவிப்பு

ஜப்பானின் அணு உலைகளில் இருந்து வெளியாகிய கதிர்வீச்சு பிரித்தானியாவை நோக்கிச் செல்வதாகவும் இதன் துணிக்கைகள் ஐரோப்பாக் கண்டத்தின் வான் பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐஸ்லாந்து நாட்டு அதிகாரிகளும் இதனை உறுதி செய்துள்ளனர்.ஜப்பான் அணு உலை களினால் எதுவித கதிர்வீச்சு கசிவு அபாயமும் தமது நாட்டுக்கு வராதென பிரித்தானிய அதி காரிகள் தெரிவித்திருந்தனர்.

மேற்படி தகவலானது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை ஜப்பானின் புகுஷிமா, இபராகி, டொச்சிஜி, கன்மா பிரதேச மாகாண ங்களில் இருந்து பால் மற்றும் சில உணவுப் பொருட்களைத் தமது நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

இவை கதிர்வீச்சினால் பாதிக்கப்பட்டிருக் கலாம் என அந்நாட்டு அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (2-4)




# இளவரசர் வில்லியம்ஸ் திருமணத்தை முன்னிட்டு கைத்தொலைபேசி தயாரிப்பு

இளவரசர் வில்லியம்ஸ் திருமணம் அடுத்த மாதம் ஏப்ரல் 29 ஆம் திகதி நடைபெற உள்ளதை முன்னிட்டு அல்காடெல் நிறு வனம் சிறப்பு கைத்தொலைபேசி ஒன்றை வடி வமைத்துள்ளது.

இளவரசர் வில்லியம்ஸுக்கும் கேட் மிடில்டனுக்கும் அடுத்த மாதம் 29 ஆம் திகதி கோலாகலமாக திருமணம் நடைபெறுவதை முன்னிட்டு அல்காடெல் நிறுவனம் சிறப்பு கைத்தொலைபேசி ஒன்றை அறிமுகப்படுத்து கிறது.

அந்த கைத்தொலைபேசியின் திரையில் இளவரசர் வில்லியம் மற்றும் மணமகள் மிடில்டன் ஆகியோரது படங்கள் இருக்கும். அதில் திருமண நாளைக் குறிக்கும் வகை யில் ஏப்ரல் 29 என்று பொறிக்கப்பட்டிருக்கும்.

இதேபோல் ஜி.ஆர் நிறுவனம் குளிர் சாதனப் பெட்டி ஒன்றை வடிவமைத்து விற் பனைக்கு விடவுள்ளது. அந்த குளிர்சாதனப் பெட்டியின் வெளிப்பகுதியில் திருமணத் தம் பதியரின் படம் பொறிக்கப்பட்டிருக்கும். இதை அந்த நிறுவனத்தின் வர்த்தக பிரிவு இயக் குநர் டேவிட் கார்டன் தெரிவித்துள்ளார். (2-4)



ஜப்பான் மியாகி மாகாணத்தில் உள்ள ஒனகாவா நகரில் சுனாமி அலைகள் தூக்கி எறிந்த மீன்பிடிப் படகு வீதியை மறித்துக் கிடப்பதையும் மலைப்புடன் பார்க்கும் மீட்புப்படை வீரர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண வைத்திய உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு நிதி ஒதுக்கீடு

கிழக்கு மாகாண அரசினர் வைத்தியசாலைகளின் கடமையாற்றும் வைத்தியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதற் காக 45 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யூ.எஸ்.ஏ. அஸீஸ் தெரிவித்துள்ளார்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக வைத்தியர்கள், உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்தே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 120 அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் , உத்தியோகத்தர்கள் 500 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்நிதி மூலம் நன்மையடைவர்.

குறித்த நிதி மாகாண சுகாதார திணைக்களத்தினூடாக திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, கல்முனை போன்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு விடுக்கப்பட்டு கொடுப்பனவு வழங்கப்பட வுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் அஸீஸ் குறிப்பிட்டார். (2-4)

## கிழக்கு மாகாணத்தில் 3500 சிறுவர் தொழிலாளிகள்

### ஆய்வில் தகவல்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் மட்டும் சுமார் மூவாயிரத்து ஐநூறு சிறுவர் தொழிலாளிகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் போதே கிழக்கு மாகாணத்தில் பொருளாதாரக் கஷ்டம் காரணமாக இவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்டு தொழில்களில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

கடும் பொருளாதார கஷ்டங்கள் மட்டுமன்றி போதுமான பாடசாலை வசதிகள் இன்மையும் அதற்குக் காரணமாக அமைந்துள்ளதாக பிரஸ்தாப ஆய்வின் போது மேலும் தெரிய வந்துள்ளது.

அதிலும் குறிப்பாக மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசத்திலேயே அவ்வாறான சிறுவர் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (2-4)

## ஓய்வூதியம் தொடர்பான புதிய சட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது

### ஜனாதிபதி தெரிவிப்பு

அனைவருக்கும் ஓய்வூதியம் கிடைக்கச் செய்வதற்கான புதிய சட்டமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு மட்டும் இருந்த ஓய்வூதியம் வங்கி, கூட்டுத்தாபன, தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுள்ளவர்கள் என அனைவரும் இத்திட்டத்துள் உள்வாங்கப்படவுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)



மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தேவார இசைமணித்துறை ஆதீன திருமுறை தோன்றல், கலாபூஷணம் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தர் குழுவினரின் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி நடைபெற்றதை படத்தில் காணலாம்.

## முல்லை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவக்குட்பட்ட குமுழமுனை மத்தி, குமிழமுனை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிக்குட்பட்ட மணவாளன் பட்டமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவிலும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, இக்கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் இடம்பெயர்ந்துள்ள குமுழமுனை மத்தி, குமுழமுனை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினுள் இயங்கும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் மணவாளன் பட்டமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார். (2)

## விஜேதாச ராஜபக்ஷவுக்கு நஷ்டஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு ஐநூறு மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ எம்.பி. முன்னர் ஆளும்கட்சியில் அமைச்சராக இருந்தவராவார். கடந்த 2007 ஆம் ஆண்டில் தான் வகித்த அரச வங்கிகள் அபிவிருத்தி அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு அவர் எதிர்க்கட்சி வரிசையில் சென்றமர்ந்தார்.

அவர் எதிர்க்கட்சிக்கு தாவியதைக் கிண்டலடிக்கும் வகையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சிலுமின வாராந்த சிங்களப் பத்திரிகை விஜேதாசவின் பிரதம நீதியரசர் கனவு கலைந்தது என்றதலைப்பில்கேலிச்செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

அதற்கு எதிராக அவர் மேல்நீதிமன்றத்தில் மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டபோதே விஜேதாச ராஜபக்ஷவுக்கு ஐநூறு மில்லியன் ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (2-4)

## உள்ளூராட்சி தேர்தல் சீர்திருத்த சட்டமூலம் நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது

### டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



உள்ளூராட்சி சபைத்தேர்தல் சீர்திருத்த சட்டமூலத்தை எதிர்வரும் 2 மாதங்களுக்குள் நாடாளுமன்றில் தாக்கல் செய்யவுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும அறிவித்தார்.

இதன்படி அண்மையில் விருப்புவாக்கு முறைமைக்கிணங்கவே தேர்தல் இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் திருத்த சட்ட மூலம் இதற்கு முன்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு தொகுதிகளை நிர்ணயிப்பதில் கால அவகாசம் போதாமையினால் அத ற்கு அனுமதி வழங்கப்படாமல் பிற்போடப்பட் டது. எனினும் விரைவில் அது தொடர்பில் ஆரா யப்பட்டு திருத்த சட்டமூலத்தை தாக்கல் செய்யவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (2-4)

## அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை அரசினர் பிரதேச வைத்தியசாலையின் வருடாந்த அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வைத்திய அதிகாரி டாக்டர் கு.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

எனவே, இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு உப செயலர் க.ஜெயச்சந்திரமூர்த்தி அறிவித்துள்ளார். (2)





வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு வடமாகாண சபையின் கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.இ.எஸ்.ராஜேந்திரன் அருகில் இருப்பதையும் கலந்துகொண்ட ஒப்பந்தகாரர்கள் மற்றும் உயரதிகாரிகள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திற்காகவும் பதவிக்காகவும் வெற்றிக்காகவும் என்னுடைய ஆன்மாவை நான் விற்பதில்லை. -நாராயண மூர்த்தி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வடக்கு, கிழக்கு மக்கள் சமஷ்டிக்கு ஆதரவளிக்கவில்லை

## அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கணிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவது போன்று வடக்கு, கிழக்கு மக்கள் சமஷ்டி முறைமைக்கு ஆதரவாக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. மாறாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனைக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளதாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆளும் சுதந்திர முன்னணி கணிசமான வெற்றிகளைப் பெற்றுள்ளது. பல இடங்களில் ஆளும் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் (அகில இலங்கை) தனித்து போட்டியிட்டன. இணைந்து போட்டியிட்டிருந்தால் ஆளும்கட்சி பல சபைகளில் வெற்றி பெற்றிருக்கும்.

இந்த வகையில் பார்த்தால் ஆளும் கட்சி வடக்கு மாகாண சபையிலும் வெற்றி பெற முடியும். அந்த நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த தேர்தலின் ஊடாக சமஷ்டிக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கூறிவருகின்றது. ஆனால் அவ்வாறு கூறுவதை ஏற்க முடியாது. காரணம் வடக்கு, கிழக்கு மக்கள் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்திற்கே ஆதரவளித்துள்ளனர்.

இதனை தமிழ் முஸ்லிம் மக்களும் முழுமையாக அங்கீகரித்துள்ளனர். வடக்கு, கிழக்கு மக்கள் இன ரீதியாக பிரிந்து வாழ விரும்பவில்லை என்பதையே இத்தேர்தல் முடிவுகள் வெளிக் காட்டியுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற முடிபடைந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட பதினான்கு சபைகளில் பன்னிரண்டில் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# குருஷேத்திரப் போருக்கு முன் துரோணர் நல்ல மனிதர்

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அமைச்சராவதற்கு முற்பட்ட காலத்தில் நல்ல அரசியல்வாதி என்ற பெயரைப் பெற்றவர்.

தமிழ் மக்கள் அவர் மீது உயர்வான மதிப்பையும் கொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினராக அவர் இருந்த காலத்தில் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்ததை நாம் ஒரு போதும் மறந்துவிட முடியாது.

இப்போது அமைச்சராக இருக்கின்ற வாசுதேவ நாணயக்காரவுக்கும் முன்னைய வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையே நிறைந்த வேறுபாட்டை தமிழ் மக்கள் காண்கின்றனர்.

மனிதர்களில் ஒரு பகுதியினர் பதவி வழியிலும், பொருளாதார வசதியிலும் தன்னிலை மறப்பர். இன்னும் சிலரோ கூட்டுச் சேர்ந்தார் வழியில் தம்மை மாற்றிக் கொள்வர்.

இதைவிட மற்றொரு பகுதியினர் சந்தர்ப்பத்திற்கு தலையசைப்பர். காரியம் முடிந்தபின் எல்லாம் மறப்பர்.

இவ்வாறு பன்மைத்துவ இயல்புகள் மனிதர்களுக்கு உண்டு.

எனினும் சிலர் இந்த இயல்புக்குட்படுகின்ற போது வேதனைப்படாமல் இருக்க முடிவதில்லை. அத்தகையவர்களில் இப்போது அமைச்சராக இருக்கின்ற வாசுதேவ நாணயக்காரவும் ஒருவர்.

தமிழ் மக்களுக்காக அவர் குரல் கொடுப்பதை காணும் போதெல்லாம் இவர்களால்தான் இந்த மண்ணில் மாரி பெய்கிறது என நினைத்ததுண்டு.

அத்தகைய நல்ல மனிதர் இப்போது மனம் மாறிவிட்டார் என்பதை நினைக்கும் போதுதான் வேதனை தலைப்படுகிறது.

ஆம்; உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான வெற்றியைப் பெற்றுள்ளதால் அவர்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக கருதி அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

அவரின் கருத்து நல்லது என நினைக்கும் வேளையில்; இனப்பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டமை பேரதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

அவரின் கருத்துப்படி அடிப்படை பிரச்சினைகள் மட்டுமே பேசப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி பேசவேண்டிய தேவை - அவசியம் இல்லை என்பதாகும்.

தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கூறிய வாசுதேவ இப்போது அது எல்லாம் தேவையில்லை,- அதற்கு அவசியமில்லை எனக் கூறுவதைக் கேட்கையில் நெஞ்சு பொறுக்கவில்லை.

என்ன செய்வது குருஷேத்திரப் போருக்கு முன்பு துரோணர் நல்ல மனிதர். அப்படித்தான் வாசுதேவரும் என்று மனதை தேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## இன்பங்களை தன்னலத்தோடு அனுபவிப்பது தவறு (லூக்கா 16: 19-31)

நேற்றைய நற்செய்தியில் வலப் பக்கம் அல்லது இடப்பக்கம் அமர, கிண்ணத்தை இயேசுவின் இரத்தத்தால் அல்லது உழைப்பின் வியர்வைத்துளிகளால் நிரப்பி நாமும் குடித்து பிறரும் குடித்து நிறைவடையச் செய்ய வேண்டும் என இயேசு கூறியதைப் பார்த்தோம்.

லூக்கா நற்செய்திக்கு மட்டுமே உரிய அருமையான ஓர் உவமை செல்வரும், இலாசரும். இந்த உவமையில் இறந்ததும் எரிநரகத்திற்குச் செல்லும் செல்வரின் வாழ்க்கை நிலையைப்பற்றி ஒரே வரியில் சுருங்கக் கூறிவிடுகிறார் ஆண்டவர் இயேசு. அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து, நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். அந்தச் செல்வர் செய்த ஒரே தவறு, தனது வீட்டு வாசலில் துன்புற்றுக் கொண்டிருந்த இலாசரைப் பற்றிக் கவலைப்படாமல், தான் மட்டும் நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்ததுதான். செல்வர் தன் கிண்ணத்தை விலையுயர்ந்த தண்ணீரால் நிரப்பியிருக்கிறார். ஒருவேளை விலையுயர்ந்த மதுவினால் நிரப்பியிருப்பார் என கொள்ளலாம். இலாசர் வறுமையால் நசுங்கி கசங்கியதால் தன் கிண்ணத்தை கண்ணீராலும் செந்நீராலும் நிரப்பியிருந்தார். இவர் தன் துன்பக் கிண்ணத்தை இயேசுவின் புதிய உடன்படிக்கையின் கிண்ணமாக தினமும் குடித்து வாழ்ந்ததால், இவருக்கு வலப் பக்கமோ அல்லது இடப்பக்கமோ அல்ல, மடியில் அமர்த்தி அழகு பார்க்கும் அருமையான ஆசீரை அருளப்படுவதை காண்கிறோம். அன்றாடம் நம் கிண்ணங்களை இவ்வாறு நிரப்பி, குடித்து, பகிர்ந்து வாழ்ந்தால், தந்தை இறைவனின் மடியில் தவழும் குழந்தையாக இருப்போம்.

உலக இன்பங்களைப் பற்றிய ஆண்டவரின் போதனை தெளிவாக இருக்கிறது. உணவு, கேளிக்கை, பொழுதுபோக்கு போன்ற உலக இன்பங்கள் அனைத்தும் நல்லவையே. ஏனென்றால், இறைவனால் படைக்கப்பட்டவை. ஆனால், அந்த இன்பங்களைத் தன்னலத்தோடு அனுபவிப்பது தவறு. அதிலேயே வாழ்வைக்கழிப்பதும் தவறு. உணவுக்காகவே வயிறு.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

வயிற்றுக்காகவே உணவு என்றிருந்தால், இரண்டையும் ஆண்டவர் அழித்துவிடுவார் (1 கொரி 6:13) என்றார் பவுலடியார். உண்மைதான், இந்த செல்வர் நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்ததால், ஆண்டவர் அவரை எரிநரகத்திற்குள்ளாக்கினார். இவ்வுலகிலும் அன்பு இயேசுவின் அருள் பெற்ற மக்களாக வாழ்வோம்.

# அன்பின் பணியாளன் பகவான் பாபா

அனந்தப்பா என்பவர் பகவான் பாபா மீது எல்லையற்ற பக்தி கொண்டவர். பகவான் இவரை இலங்கையில் இருந்த விபீஷணன் போன்றவன் என்று வர்ணிப்பார். அனந்தப்பாவிற்கு இரு பெண்பிள்ளைகள். இரண்டாவது மகளின் கணவன் மைசூர் புகையிரத திணைக்களத்தில் வேலை செய்து வந்தார். அங்கேயுள்ள விடுதியிலேயே தன் மனைவியுடன் தங்கியிருந்தார். இருந்தும் இவர் தன்மனைவியின்மீது சந்தேகம் கொண்டார். அவளை நித்தமும் திட்டித் தீர்த்துக்கொண்டே இருந்தார். இந்த சித்திரவதையை தாங்க முடியாது அவள் புட்டபர்த்தியிலுள்ள பகவானிடம் தன்னை அழைத்துச் செல்லும்படியும், சுவாமி என்னைப் பதிவிரதை என்று கூறினால், என்னை அமைதியாக வாழவிட வேண்டும் என்றும், இல்லாவிடில் புட்டபர்த்தியிலேயே என் வாழ்வை முடித்துக்கொள்வேன் என்றும் கூறினாள்.

இருநாட்கள் கழிந்து கணவன், மனைவி, அவளின் தாய், தகப்பன் அனந்தப்பா நால்வரும் புட்டபர்த்தி பயணமானார்கள். அன்பே உருவமான பகவான் அவர்களை சம்பாஷிக்கும் அறைக்குள் அழைத்து உன் மனைவி உத்தமி. இதனை நம்பு என்றார். ஆனால், அவன் நம்பவில்லை. பதிலுக்கு பகவானைத் திட்டத் தொடங்கினான். சுவாமி அவனை வெளியே தூக்கியெறிந்து கதவை மூடிக்கொண்டார். பகவான் அனந்தப்பாவை நோக்கி கவலைப்பட வேண்டாம். அந்த மனிதன் நிச்சயமாக மனம் மாறி உன்மகளைத் தேடிவருவான் என்றார்.

மைசூர் திரும்புவதற்காக புகையிரதத்தில் அனந்தப்பா குடும்பம் ஒரு பெட்டியிலும், மருமகன் பிறிதொரு பெட்டியிலும் ஏறிக்கொண்டனர். புகைவண்டி சிறுதூரம் நகர்ந்தாலும் இரவு ஒரு மணியளவில் அப்பெட்டியில் தனித்திருந்தவன் கூச்சலிடத் தொடங்கினான். அடுத்த தரிப்பிடத்தில் புகையிரதம் தரித்தபோது புகையிரத காப்பாளர் இவரின் பெட்டிக்குள் நுழைந்தார். அப்போது அவன் தன் கன்னங்களைத் தடவிக் கொண்டிருந்தான். காப்பாளர் நடந்ததை விசாரித்தார். இந்த நிலையத்திற்கு6 கிலோ மீற்றர் முன்பாக பெட்டியின் சகல விளக்குகளும் சிவப்பு மயமாகவும் சத்யசாயி பாபாவின் உருவம் அவ்வொளியினுள் ஊடுருவி வந்து தனது இரு கன்னங்களிலும் மாறிமாறி அடித்தது. 'உன் மனைவி உத்தமி. சொன்னால் நம்பமாட்டாயா? நான் சொல்லுகிறபடி நடப்பாயா?' எனக் கேட்டு அடித்தது எனக் கூறினான்.




இந்நிகழ்வால் மனம் மாறிய அவன் தன் மனைவியை தன்னுடன் விடுதிக்கு அழைத்துச் சென்றான். ஒரு முறை சுவாமி தன்னடியார்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும் போது இந்த உருவம் அன்பின் வடிவானது எனத் தன்னை விழித்துக் கூற, கஸ்தூரி என்பவர் சுவாமி இந்த அவதாரத்தில் ஒருத்தரையும் அடித்ததில்லையா என வினவினார். அப்போது பகவான், ஓ..... அனந்தப்பாவின் மருமகனைச் சொல்லுகிறாயா? நான் அவன் மீதிருக்கும் அளவற்ற அன்பினாலேயே அப்படிச்செய்தேன் என்றார்.

ஜெய் சாய்ராம் யாதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவரின் முடிபை அறிந்திருந்தால் சச்சின் வெளியேறியிருக்கமாட்டார்

## பொன்டிங் கூறுகிறார்



சென்னையில் நடந்த உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் ராம்போல் வீசிய பந்தில் ஆட்டமிழந்த சச்சின் டெண்டுல்கர் நடுவரின் முடிபை எதிர்பார்க்காமல் தானாகவே களத்தை விட்டு வெளியேறினார்.

நடுவர் ஆட்டமிழப்பு கொடுக்கமறுத்தும் அதைக் கவனிக்காமல் சச்சின் வெளியேறியது அனைவரது வரவேற்பையும் பெற்றது.

அதேசமயம் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் துடுப்பில் பந்து பட்டும் வெளியே போகவில்லை. இது விமர்சனத்தை ஏற்படுத்தியது.

இந்தவிவகாரங்கள்தொடர்பாக பொன்டிங் கூறியதாவது,

நடுவரின் முடிபை சச்சின் பார்க்கவில்லை என்று நான் நினைக்கிறேன். அதைப் பார்த்திருந்தால் அவர் வெளியேறியிருக்கமாட்டார். இதுவும் ஆட்டத்தின் ஒரு பகுதிதான்.நான் எப்போதும் நடுவரின் முடிவுக்காக காத்திருப்பேன். அணித்தலைவர் பதவி குறித்து பல விமர்சனங்கள் எழுகின்றன. எனது துடுப்பாட்டம் சரியில்லை. அதனால்தான் அப்படி பேசுகிறார்கள் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சேவாக்கை வீழ்த்தும் திட்டம் ரெடி

அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜோன்சன் அளித்த பேட்டியில்,

சேவாக் போன்ற வீரர்களுக்கு பந்து வீசுவது சவாலான விடயம். உடலை குறிவைத்து வீசப்படும் ஷோட்பிட்ச் பந்து வீச்சில் அவர் திணறுவார் என்பதால் அந்த வகையான பந்துகளை கையாள திட்டமிட்டுள்ளோம். அவரை விரைவிலேயே ஆட்டமிழக்க செய்து விட்டால் எங்களுக்கு சிறப்பாக இருக்கும்.

சேவாக்கை குறிவைத்து பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறோம். அவை அனைத்தும் சரியான முறையில் கைகொடுத்தால் ஆட்டம் எங்கள் கையில் இருக்கும். சேவாக் மட்டுமல்லாது இந்திய அணியின் துடுப்பாட்டம் நீண்டவரிசையாக உள்ளது.

சச்சின், காம்பீர், ஹோலி, யுவராஜ் என எல்லோருமே மிரட்டக்கூடியவர்கள்தான். எனினும் பந்துவீச்சை பொறுத்தவரை நாங்கள் அதிக நம்பிக்கையுடன் உள்ளோம்.

140 கி.மீ. வேகத்தில்கூட பந்து வீசுவோம். 3 விக்கெட்டுக்களை விரைவாக வீழ்த்தி விட்டால் ஆட்டத்தை கட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# இலங்கைக்கு சம்பியன் வாய்ப்பு அர்ஜுன ரணதுங்க கணிப்பு

இலங்கை அணிக்கு உலகக்கிண்ணம் பெறும்வாய்ப்பு அதிகம் உள்ளது என முன்னாள் அணித்தலைவர் ரணதுங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஸ் மண்ணில் பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் கொழும்பில் நாளை மறுதினம் பிரேமதாசா மைதானத்தில் நடக்கும் 4 ஆவது காலிறுதியில் இலங்கை, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

இது குறித்து கடந்த 1996 இல் இலங்கை அணிக்கு உலகக்கிண்ணத்தைப் பெற்றுத் தந்த அர்ஜுனா ரணதுங்கா கூறியதாவது,

லீக் சுற்றில் இலங்கை அணி சிறப்பாகச் செயல்ப்பட்டது. இது அடுத்து வரவுள்ள நொக் கவுட் சுற்றிலும் தொடரும் என நம்புகின்றேன். இம்முறை இலங்கை அணிக்கு உலகக்கிண்ணம் வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. இதற்கு காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகளை சொந்த மண்ணில் விளையாட இருப்பது சாதகமான விடயம்.

ஆசிய மண்ணில் இலங்கை அணியினர் சிறப்பாக விளையாடக் கூடியவர்கள். எனவே எங்கு விளையாடுகின்றோம் என்பது பெரிய கவலையளிக்காது. ஏனெனில் கடந்த 1996 இல் உலகக்கிண்ணம் வென்ற இலங்கை அணி காலிறுதிப் போட்டியை பைசலாபாத்திலும்(பாகிஸ்தான்), அரையிறுதிப் போட்டியை கொல்கத்தாவிலும் (இந்தியா) விளையாடியது.

இங்கிலாந்து வீரர்கள் சுழலில் திணறக் கூடியவர்கள் இருப்பினும் இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரோரஸ், திரோட் உள்ளிட்டோர் துடுப்பாட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். எனவே இவர்களுக்கு மிகுந்த கவனமுடன் பந்துவீச வேண்டும். முரளிதரன், மெண்டிஸ், டில்சான் உள்ளிட்ட திறமையான சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பது பலம். இவ்வாறு ரணதுங்கா கூறினார்.

## நான் பைத்தியக்காரனா?

அகமதாபாத்தில் நேற்று முன்தினம் பயிற்சி முடிந்து வெளியேறிய சச்சினிடம் சென்னை போட்டியில் ராம்போல் வீசிய பந்து உங்கள் மட்டையில் பட்டது என்று நீங்கள் இப்போதும் நினைக்கிறீர்களா? என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு உடனடியாக பதில் அளித்த சச்சின் அப்படியானால் என்னை பைத்தியக்காரன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்று திருப்பிக்கேட்டார்.


Study in UK

IELTS இன்றி

SPOT ADMISSION

O/L தகமை போதுமானது

இறுதி சந்தர்ப்பம்

புதிய விசா நடைமுறைகள் April 1ம் திகதி அறிமுகப்படுத்தப்பட இருப்பதால் இறுதி சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்

April Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

1) UKBA Highly Trusted College
2) IELTS தேவையில்லை
3) 4 வருட visa உத்தரவாதம்
4) 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி
5) மறைமுக கட்டணங்கள் எதுவும் இல்லை
6) ஒரு மாதத்தில் பயணம்

தலைநகரில் அதி கூடுதலான விசாக்களை பெற்றுக்கொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்



காலம் 26th March 2011 : 10.00a.m. - 1.00p.m.

இடம் Exponet Head Office - Colombo

விசா நடைமுறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது*

எமது சேவை முற்றிலும் இலவசமானது

*Condition Apply

பதிவுகளுக்கு COLOMBO - 0117 555511 JAFFNA - 021 7538395 HOTLINE - 0117 555514 FAX - 0117 555517

EXPONET Overseas Consultants

Head office - 379-1/2, Galle Road, Colombo 6, Sri Lanka Tel:0714150995

Jaffna Branch - 102 2/2, Navalar Road, Jaffna

London Branch - No:56,The Gradens Harrow Middlessex HA1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதி வாய்ப்பு யாருக்கு?

# ஆஸி.-இந்தியா இன்று மோதல்



உலகக் கிண்ண தொடரில் இன்று நடக்கும் பரபரப்பான காலிறுதிப் போட்டியில் இந்தியா-அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி அரையிறுதியை உறுதி செய்ய இரு அணி வீரர்களும் காத்திருக்கின்றனர்.

இந்திய துணைக்கண்டத்தில் பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது இன்று அகமதாபாத் சர்தார் படேல் மைதானத்தில் நடக்கும் இரண்டாவது காலிறுதிப் போட்டியில் (பகலிரவு) இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள்பலப்பரீட்சை மேற்கொள்கின்றன.

**துடுப்பாட்ட பலம்**

இந்திய அணியை பொறுத்த வரை துடுப்பாட்டம் பலமாக உள்ளது. லீக் போட்டிகளில் முதல் பந்தில் பவுண்டரி அடித்து ஓட்டங்கள் கணக்கை ஆரம்பித்த சேவாக் இன்றும் அசத்தலாம்.

மறுபக்கம் சச்சின் சதத்தில் சதம் கடந்து புதிய சாதனை படைக்கலாம். மூன்றாவது வீரராக களம் இறங்கும் காம்பீர் தனது பொறுப்பான ஆட்டத்தை தொடரலாம். சகல துறை வீரராக எழுச்சி கண்டுள்ள யுவராஜ்சிங்மீண்டும்அசத்தகாத்திருக்கிறார்.

**ரெய்னா வாய்ப்பு**

யூசுப் பதான் தொடர்ந்து சொதப்புவதால் நீக்கப்படலாம். சுரேஷ்ரெய்னா வாய்ப்பை தக்க வைக்கலாம். விராட் ஹோலி, அணித்தலைவர் தோனி உள்ளிட்டோர் நடுத்தர வரிசையில் அதிரடிகாட்டினால்நல்லது. பவர்பிளே ஓவரில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் திணறுவதைதவிர்க்கும்பட்சத்தில்அவுஸ்திரேலியாவுக்கு எதிராக வலுவான ஓட்ட எண்ணிக்கையை எட்டலாம்.

**சகீர் கான் நம்பிக்கை**

அனுபவ சகீர்கான் வேகப்பந்து வீச்சில் பலம் சேர்க்கிறார். இது வரை 6 போட்டிகளில் 15 விக்கெட் வீழ்த்தியுள்ள இவர் இன்றும் விக்கெட் வேட்டை நடத்தலாம்.

இவருக்குமுனாப் பட்டேல், ஆஷிஸ் நெஹ்ரா, சிறிசாந்த் உள்ளிட்ட சகவேகங்கள்ஒத்துழைப்புக்கொடுக்கவேண்டும்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக களமிறங்கிய இளம் சுழல் பந்து வீச்சாளர் அஷ்வின் தனது தேர்வை நியாயப்படுத்தினார். இவர் இன்றும் களம் இறக்கப்படலாம். அனுபவ ஹர்பஜன் கூடுதலாக விக்கெட் வீழ்த்தினால்நல்லது. பகுதிநேரசுழலில்யுவராஜ் சிங் விக்கெட் வீழ்த்துவது சுழலின் பலத்தை அதிகரித்துள்ளது.

**வோட்சன் அசத்தல்**

அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்தில் வோட்சன், பிராட் ஹடின் நம்பிக்கையளிக்கின்றனர். தலா 3 அரைச்சதம் கடந்து அசத்தியுள்ளனர். இவர்களது பொறுப்பான ஆட்டம் இன்று தொடரும் பட்சத்தில் நடுத்தர வரிசையில் துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி குறையும்.

**பொன்டிங் எதிர்பார்ப்பு**

அணித்தலைவர் பொன்டிங் போர்மின்றி தவித்துவருவது அவுஸ்திரேலியாவுக்கு பின்னடைவான விடயம் முக்கியமான போட்டிகளில் எழுச்சி காணும் இவர் இன்று அபார ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

மைக்கல் கிளார்க், வைட் இது வரை பெரிய அளவில் சாத்திக்கவில்லை. எனவே இவர்கள் தங்களது அனுபவத்தை வெளிப்படுத்தி ஓட்டங்கள் குவிப்பில் ஈடுபடவேண்டும். மைக்கல் ஹசி வருகைக்குப் பின் நடுத்தர வரிசை வலுவடைந் துள்ளது.

**பிரெட் லீ ஆறுதல்**

அவுஸ்திரேலிய அணியின் திறைமையான வேகப்பந்து வீச்சாளர் நிறைய உள்ளனர். கடந்த 6 போட்டியில் 12 விக்கெட் வீழ்த்தியுள்ளபிரெட் லீ இன்றும் அசத்தலாம்.

அனுபவ ஜோன்சன், ரைட் உள்ளிட்டோர் தலா 10 விக்கெட் மட்டுமே கைப்பற்றியுள்ளனர். இவர்கள் இன்று எழுச்சி பெறும் பட்சத்தில் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சிக்கலாகிவிடும்.


ஷேன்வோர்ன் போன்ற அனுபவ வீரர்கள் இல்லாத நிலையில் சுழலில்கிரஜ்ஜா, ஸ்டீபன்சிமித் முழுத்திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

பகுதிநேர சுழலில் மைக்கல் கிளார்க் நம்பிக்கை அளிக்கிறார். சுழலில் பலத்தை அதிகரிக்க டேவிட் ஹசிக்குவாய்ப்புவழங்கினால்நல்லது.

சொந்த மண்ணில் சாதிக்க இந்தியாவும்நடப்புச்சம்பியன் அந்தஸ்தை தக்க வைக்க அவுஸ்திரேலியாவும் தயாராக இருப்பதால் அனல் பறக்கும் ஆட்டத்தை ரசிகர்கள் எதிர்பார்க்கலாம்.

**பத்தாவது முறை**

உலகக்கிண்ண அரங்கில் இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் 10ஆவது முறையாக மோதவுள்ளன. முன்னதாக விளையாடிய 9 போட்டிகளில் அவுஸ்திரேலியா 7 இந்தியா இரண்டு வெற்றி கண்டன.



**பயிற்சியில் வெற்றி**

10ஆவது உலகக்கிண்ணத் தொடருக்காக பெங்களூரில் நடந்த பயிற்சிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 214 ஓட்டங்கள் எடுத்தது. பின்வந்த அவுஸ்திரேலியா176ஓட்டங்களுக்குசுருண்டது.

**கடந்துவந்த பாதை...**

**அவுஸ்திரேலியா**

**லீக் சுற்று**

(01) 91ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாவேயுடன் வெற்றி.

(02) 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வென்றது.

(03) இலங்கைக்கு எதிரான போட்டி கைவிடப்பட்டது.

(04) கென்யாவை 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

(05) கனடாவுடன் 7 விக்கெட் வித் தியாசத்தில் வெற்றி.

(06) பாகிஸ்தானிடம் 4 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி.

**இந்தியா**

**லீக்சுற்று...**

(01) 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியுடன் வெற்றி.

(02) இங்கிலாந்துக்கு எதிரான போட்டி சமநிலையானது.

(03) அயர்லாந்துடன் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி.

(04) 5 விக்கெட் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வென்றுள்ளது.

(05) தென்னாபிரிக்காவுடன் 3 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி.

(06) மேற்கிந்தியத்தீவுகள் அணி [illegible]








## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?.................................................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..................................................

முகவரி..................................................

தொலைபேசி..................................................

தே.அ.அ.இல..................................................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனப் பதிவுகளின் எண்ணிக்கை 2011ஆம் ஆண்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

2011ஆம் ஆண்டின் முதல் இரு மாதங்களில் கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும்போது வாகனப் பதிவுகளின் எண்ணிக்கையில் வெகுவான அதிகரிப்பு காணப்படுவதாக இலங்கை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ் வருடம் ஜனவரிமாதம் 39 ஆயிரத்து 544 வாகனங்களும் பெப்ரவரி மாதம் 35 ஆயிரத்து 666 வாகனங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 19 ஆயிரத்து 90 வாகனங்களும் பெப்ரவரி மாதம் 24 ஆயிரத்து 662 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டு மொத்தமாக மூன்று இலட்சத்து 59 ஆயிரத்து 243 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவ்வருட வாகனப் பதிவுகள் கடந்த வருடத்தை விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

18 பிரிவுகளில் வாகனங்கள் பதிவுசெய்யப்படுகின்றன. இவற்றில் அதிகமாக மோட்டார் சைக்கில்கள், முச்சக்கர வாகனங்கள், கார்கள். என்பன பதிவுசெய்யப்படுவதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-5)

## எழுத்தாளர்களுடனான சந்திப்பு

தமிழ் மக்களின் இன்றைய தேவையை மையப்படுத்திய ஆக்க இலக்கியப் படைப்புக்கள் மற்றும் சமூக, பொருளாதார, அறிவியல் படைப்புகள் என்பவற்றுக்கான களம் அமைக்கும் நோக்குடன் எழுத்தாளர்களுடனான சந்திப்பொன்றை உங்கள் வலம்புரி நாளிதழ் ஏற்பாடு செய்துள்ளது.

இச் சந்திப்பை ஒழுங்குபடுத்துவதற்கு வசதியாக கலந்து கொள்ளவிருக்கும் எழுத்தாளர்களின் பெயர் விபரங்களை வலம்புரியின் எழுத்தாளர் அவை பதிவுசெய்யவுள்ளது. எனவே எழுத்தாளர்கள் (இளம் எழுத்தாளர்கள் உட்பட) தங்கள் முழுப் பெயர், தபால் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விபரங்களை,

**"எழுத்தாளர் அவை"**
**வலம்புரி**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**எழுத்தாளர் அவை,**
**வலம்புரி.**

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை அனுமதிக்கப் போவதில்லை

## மீனவர் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தல்

(கொழும்பு)

வடபகுதி கடற்பிராந்தியத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை இனியும் அனுமதிக்கப் போவதில்லையென யாழ்.மீனவ சங்கப் பிரதி நிதிகள் வலியுறுத்தியுள்ளனர். அதே நேரம் இந்திய மீனவர்களுடன் ஏற்கெனவே காணப்பட்டுள்ள உடன்பாடுகளை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்படுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை, இந்திய மீனவர்களின் முரண்பாடுகள் குறித்து நேற்று கொழும்பில் முக்கிய சந்திப்பொன்று ஏற்பாடாகியிருந்தது. இதில் இரு நாடுகளின் அமைச்சர்களும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதாக இருந்தது. எனினும் இந்திய அமைச்சர் கலந்து கொள்ள வில்லை. (ந-5)

## ஐ.தே.க...

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவராக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## பாதுகாப்பு...

இந்தப் பணயத்தின்போது பிரதியமைச்சர் ஒருவரின் வாகனம் ஜனாதிபதி பயணித்த வாகனத்தை உரசியபடி வேகமாகக் கடந்து சென்றதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## லிபியா...

தனது வீட்டிலிருந்து அவர் இந்த உரையை ஆற்றியதாகத் தெரிகிறது.

ஆத்திரம் பொங்கவும், எதிர்த்துச் சவால் விடும் விதமாகவும் கடாபியின் உரை அமைந்திருந்தது.

சர்வதேசக் கூட்டணிப் படையினரை சிலுவைப் போராளிகள் என்று வர்ணித்த கடாபி முஸ்லிம் படைகள் அனைத்தும் ஒன்று திரண்டு அந்த கிறிஸ்தவப் படைக்கு எதிராகப் போரிட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

தன்னை எதிர்த்து மோதுபவர்கள் பாசிசவாதிகள் என்றும் அவர்கள் இறுதியில் சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில்தான் சென்று சேர்வார்கள் என கடாபி தெரிவித்தார்.

ஒரு பக்கம் கடாபி இவ்வாறு சவால் விட்டாலும் மறுபக்கம் அவரைச் சுற்றியிருக்கும் ஆதரவாளர்கள் தற்போதைய நெருக்கடியிலிருந்து வெளிவர அவசரஅவசரமாக வழியொன்றைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் கிளாரி கிளிண்டன் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# இலங்கையைப் பிளவுபடுத்த...

குறிப்புக்களும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

இலங்கை விவகாரத்தில் மூன்று வகையான தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளது. மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துதல், இந்தியாவுக்கு விசுவாசமான போராளிக் குழுக்களுக்கு ஆதரவளித்தல், போர்க்குற்றங்கள் தொடர்பாக கொழும்புக்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சக்திகளை வலியுறுத்துதல் போன்ற தந்திரோபாய நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுத்திருப்பதாக இலங்கையைத் தளமாகக் கொண்டபாதுகாப்புஆய்வாளர்ஒருவர் தொலைபேசி மூலம் கூறியுள்ளார்.

2005ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி இடம்பெற்ற இலங்கையின் தேர்தல் இந்தியா விழித்தெழுவதற்கான அழைப்பு என புதுடில்லி குறிப்பிட்டிருந்ததாக விக்கிலீக்ஸ் தெரிவித்திருக்கிறது. இலங்கையுடன் ஏற்கெனவே கொண்டிருந்த நெருங்கிய நட்புறவை தொடரும் அதேசமயம் போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பதற்கான முக்கியத்துவத்தை இலங்கையின் புதிய ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்யும்போது வலியுறுத்துவது என இந்தியா திட்டமிட்டிருந்ததாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் கடும்போக்கான கருத்துக்கள், சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இறுதியாக இருக்கும் நம்பிக்கையையும் நசுக்கிவிடக் கூடும் என டில்லியிலுள்ள அவதானிகள் கவலைப்பட்டதாக இத் தகவல் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தேர்தலைப் பகிஷ்கரித்தமை தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் மோகன் குமார் தெரிவித்திருக்கிறார். மகிந்த ராஜபக்ஷவுக்கு சாதகமாக ஐ.தே.க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை அகற்றுவதற்கான பிரபாகரனின் செயற்பாட்டில் சாட்சியமாக தேர்தல் பகிஷ்கரிப்பு இருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

சமாதான பேச்சுவார்த்தைகளில் மீண்டும் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்வதற்காக பிரபாகரன் இதைச் செய்ததாக மோகன்குமார் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் வெளிவிவகார செயலாளர் சரணுக்கும் இந்தத் தீர்மானத்தை அவர் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்கா தொலைவிலுள்ளது. அமெரிக்கக் கப்பல்கள் இலங்கைக்கு வரப்போவதில்லை என்பது விடுதலைப்புலிகளுக்கு தெரியும் என்று மோகன்குமார் கூறியுள்ளார். மறுபக்கத்தில் எந்தத் தருணத்திலும் இந்திய அரசாங்கம் படைகளைக் கொண்டு வர முடியும் என்பது தொடர்பான விடுதலைப் புலிகளின் கவலைகளிலிருந்து இந்தியா அனுகூலத்தைப் பெற்றது.

சமாதானம் இல்லாத, போரும் இல்லாத நிலைவரத்திற்கு மகிந்த ராஜபக்ஷ தன்னை மிதவாதத் தன்மையுடன் மாற்றிக் கொள்ளக் கூடிய சாத்தியம் இருப்பதாக அவர் எதிர்வு கூறியுள்ளார். சிங்கள மக்களின் கருத்தொருமைப்பாட்டை பெற்றுக்கொள்ள சமாதானப் பேச்சுவார்த்தையின் அனுசரணையாளராக நோர்வேயை மீண்டும் ஈடுபடுத்துவதே ஒரோ வழி என மோகன் குமார் தெரிவித்திருக்கிறார்.

போர் நிறுத்தத்தை மீளாய்வு செய்வதற்கான மகிந்த ராஜபக்ஷவின் நோக்கங்களின் அடிப்படையில் அதனைப் பேணிப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது மோகன்குமாரின் பரிந்துரையாக இருந்தது. இந்த விடயமானது அமெரிக்காவின் நோக்கங்களுடன் இணைந்தது என்பது உண்மையாகும். போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டு விட்டது என்பது சகலருக்கும் தெரியும் என்று அவர் கூறியுள்ளார். ஆனால் வன்முறைகள் மீள ஏற்படாமல் தடுப்பதற்கு போர்நிறுத்தம் இருப்பது முக்கியமானதென அவர் தெரிவித்திருக்கின்றார் என அவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

# அதிகாரப் பகிர்வு யோச...

27 ஆம் திகதிகளில் சந்திக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், புனர்வாழ்வு நிலையங்களில் தங்கியுள்ள விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை விடுதலை செய்தல், மீள் குடியேற்றம் என்பன தொடர்பில் 07ஆம் திகதி நாம் பேசவுள்ளோம்.

புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள தமிழ் இளைஞர்களின் விபரங்களை அரசாங்கம் வெளியிடவுள்ளமை பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும்.

பதினொராயிரம் இளைஞர்கள் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளதாக நாம் நம்புகிறோம். அரசாங்கம் இவர்களை இயன்றளவு விரைவில் விடுவிக்கவேண்டும். அல்லது இவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கான சான்றுப் பொருட்கள் இருப்பின் அரசாங்கம் வழக்குத் தொடர வேண்டும்.

அதேவேளை கடந்த ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

த.தே.கூட்டமைப்பு தூதுக்குழுவில் மாவை சேனாதிராஜா எம்.பி. தலைமையில் சுரேஷ் பிரேமச் சந்திரன், ஏ.சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி கனகீஸ்வரன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தமிழர்களின்...

மக்களுக்கு இருப்பதாக உருவகப் படுத்தும் பேச்சுவார்த்தைகளை எதிர்க்கின்றோம். இவ்வாறான ஒரு பேச்சு வார்த்தையெனில் முதலில் தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்சினை என்னவென்பதை கூட்டமைப்பு வெளியிட வேண்டும். அதேவேளை பிரபாகரனின் நாட்டைப் பிரிக்கும் யோசனைகள் முன்வைக்கப்படுமாயின் அவற்றை அரசாங்கம் நிராகரிக்க வேண்டும் எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## ஐ.நா. கொழு...

தலைமையிலான நாடுகள் முயல்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் லிபியாவில் ஐ.நா. கூட்டுப்படைகளின் தாக்குதல் காரணமாக அப்பாவி மக்களே பலியாவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதன் காரணமாக லிபியா மீதான தாக்குதலுக்கு அனுமதியளித்த ஐ.நாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் கொழும்பு அலுவலகத்தை பெருந்தொகையான ஆதரவாளர்களுடன் இன்று முற்றுகையிடவுள்ளதாக அவர் நேற்று அறிவித்துள்ளார்.

மேலும் உலகளாவியரீதியில் அமெரிக்கா தலைமையிலான லிபியத் தாக்குதலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் தொடக்கமாக இது அமையும் என்றும் அமைச்சர் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

**1St in Com, G.A.Q (வெளிவாரி)**
**யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம்**

* மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உயர்-கல்வி அமைச்சினால் மறுசீரமைக்கப்பட்ட மாற்றங்களை நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்ட காரணத்தினால் மீண்டும் பழைய நடைமுறையில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
* மீண்டும் பழைய நடைமுறைப்படி A/L-ல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
* பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் அவசியமில்லை. கடந்த கால முறைப்படி மூன்று பிரதான பாடங்களிலும் இரண்டு பரீட்சைகள் மட்டும்.
* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கடந்தகால முறைப்படி பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
* விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
* பதிவுகளை மேற்கொள்ளவும்.

விபரங்கட்கு
S. அருள்நங்கை (நிர்வாகி)

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(அ-2748)

**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**A/L 2013**
**கலை, வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org